தொல்காப்பியப் பொருளதிகாரம்

கருத்துரையும் ஆங்கில மொழி பெயர்ப்பும்

PORULATIKARAM OF TOLKAPPIYAM

An English Version

Dr. A. A. Manavalan

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies

தொல்காப்பியப் பொருளதிகாரம்

(கருத்துரையும் ஆங்கில மொழிபெயர்ப்பும்)

(அகத்திணை இயல் - புறத்திணை இயல்)

Poruḷatikāram of Tolkāppiyam

An English Version

(Akattiṇai iyal and Puṟattiṇai iyal)

Dr. A.A. MANAVALAN

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

International Institute of Tamil Studies

இரண்டாவது முதன்மைச்சாலை

மையப் பல்தொழில் நுட்பப் பயிலக வளாகம்

தரமணி, சென்னை - 600 113

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Porulatikāram Tolkāppiyam of (Akattiṇai iyal and Puṟattiṇai iyal)
Author	:	Dr. A.A. Manavalan International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus Chennai - 600 113
Publisher	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus, Tharamani, Chennai - 600 113 Ph:22542992
Publication No	:	556
Language	:	Tamil & English
Year of Publication	:	2005
Edition	:	Second Edition; First : 1998
Paper used	:	TNPL 18.6 Kg TNPL Maplitho
Size of the Book	:	Demy 1/8
Printing Types	:	10 Points
No. of Pages	:	XLVI + 122
No. of Copies	:	1000
Price	:	Rs.50/- (Rupees Fifty only)
Printing	:	**Pavai Printers (P) Ltd.,** 142, Jani Jan Khan Road, Royapettah, Chennai - 600 014. Ph: 28482441, 28482973
Subject	:	Tamil Grammar

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113.

அணிந்துரை

தொல்காப்பியம் தமிழின் தொன்மையையும், இலக்கிய வளத்தையும் எடுத்துக்காட்டும் ஆவணமாகும். இந்நூல் மொழிக்கு மட்டும் இலக்கணம் கூறாமல் மக்களின் வாழ்வியலுக்கும் இலக்கணம் கூறும் நூலாகவும் திகழ்கிறது.

தொல்காப்பிய எழுத்ததிகாரத்திலும் சொல்லதிகாரத்திலும் கூறப்பட்டுள்ள இலக்கணக் கூறுகள் மேலை மொழியியல் வல்லுநர்களும் வியந்து பாராட்டும் வகையில் அமைந்துள்ளன.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் காணப்படும் மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல் , போன்ற இயல்கள் தொல்காப்பியர் காலத்திலும் அவருக்கு முன்பாகவும் வெவ்வேறு யாப்பு இலக்கணங்கள் பரந்து விரிந்த நிலையில் பயிற்சியிலிருந்தன என்பதை எடுத்துக் காட்டுகின்றன. அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் போன்ற இயல்கள் மக்களின் செம்மாந்த இருப்பையும், அவர்களின் வாழ்வியலையும், உணர்வுபூர்வமான வாழ்க்கை நிலைகளையும் மிகச் சிறப்பாக எடுத்துக்கூறியுள்ளன. பொருளதிகாரத்தின் இறுதி இயலான மரபியல் உயிரினங்கள் மரபு வழியாக எவ்வாறு சொல்லப்பட்டு வந்தன என்பதை நமக்கு உணர்த்துகின்றது. மரபு என்று கருதும் நிலையில் அவை எத்தகு மரபுக்காலத்தைச் சேர்ந்தவை என்று சுட்டி அறுதியிட முடியாத நிலையில் மரபியல் கருத்துகள் மிகத் தொன்மை வாய்ந்தனவாகக் கருதப்படுகின்றன. எனவே மொழி, வாழ்வியல், உயிரினத் தொகுதி ஆகியவற்றின் கட்டமைப்பை வரையறுத்துக்கூறும் ஒரு முழுமையான இலக்கணமாகத் தொல்காப்பியம் விளங்குகிறது என்பதை அனைவரும் உணரலாம்.

தமிழின் முதல் நூலாக விளங்கும் இத்தகு இலக்கண நூலை உலகோர்க்குக் கொண்டுசேர்க்கும் வகையில் தலையாயதாக விளங்குவது இதன் மொழிபெயர்ப்பாகும்..

தொல்காப்பியத்தை அறிஞர் பலரும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளனர். தொல்காப்பியத்தின் சிறப்பு உலகெங்கும் ,

பரவுவதற்கு இம் மொழிபெயர்ப்புகள் பாலமாக அமைகின்றன என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

தொடர்ந்து மொழி ஆய்வுப் பணிகளையும், மொழிபெயர்ப்புப் பணிகளையும் மேற்கொண்டுவரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் முன்பு வெளியிட்ட அரிய நூல்களை மீண்டும் மறுபதிப்புச் செய்வதிலும் ஆர்வம்காட்டி வருகிறது. அவ்வகையில் பேராசிரியர் முனைவர் அ.அ. மணவாளன் அவர்கள் முன்பு மொழிபெயர்த்த தொல்காப்பியம் பொருளதிகாரம் குறித்த உரையின் ஆங்கில மொழிபெயர்ப்பான அகத்திணையியல் புறத்திணையியல் எனும் நூலைத் தேவை கருதி மறுபதிப்புச் செய்ய இந்நிறுவனம் எண்ணியது. இதற்கு இசைவளித்த இந்நிறுவனப் பதிப்புக்குழுவிற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதல் பதிப்பில் காணப்பட்ட பல்வேறு பிழைகள் நூலாசிரியரால் செப்பம் செய்யப்பட்டுச் சீரிய பதிப்பாக இப்பதிப்பு இப்போது வெளிவருகிறது.

தொல்காப்பிய நூற்பாக்களின் மொழிபெயர்ப்பாக அமையாமல், கருத்தின் மொழிபெயர்ப்பாக இந்நூல் அமைந்திருப்பதால் அனைவரும் எளிதில் விளங்கிக் கொள்ளும் வகையில் இந்நூல் விளங்குகிறது.

இந்நூல் முதற்பதிப்பில் உள்ளதை அவ்வாறே ஒளிநகல் எடுத்து அச்சிடப்பெறாமல் மீண்டும் கணிப்பொறியில் ஒளிக்கோப்புச் செய்யப்பட்டுப் புதிய பதிப்பாக வெளிக்கொணரப் படுகிறது.

இந் நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திருமிகு சி.வி. சண்முகம் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத் துறைச் செயலாளர் முனைவர் பு.ஏ. இராமையா இ.ஆ.ப., அவர்களுக்கும், சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப., அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு ஒளி அச்சுக்கோப்புச் செய்த கணிப்பொறி உதவியாளர் திருமதி பி. கௌசல்யாவுக்கும் திரு. சு. கண்ணனுக்கும் அழகுற அச்சிட்டுத் தந்த பாவை அச்சகத்தார்க்கும் பாராட்டுகள்.

சென்னை
29-11-2005

இயக்குநர்

முனைவர் ச.சு. இராமர் இளங்கோ
மேனாள் இயக்குநர்

முதற் பதிப்பின் அணிந்துரை

வடவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ் கூறும் நல்லுலகில் வாழ்ந்த தமிழ் மக்களின் மொழிக்கு இலக்கணம் கூறும் நூல் ஒல்காப் பெரும்புலவர் தொல்காப்பியர் இயற்றிய தொல்காப்பியம்.

இந்நூல் தமிழ் மொழியின் தொன்மையையும், சிறப்பையும் எடுத்துரைப்பதற்கும், தமிழ் மக்களின் நாகரிகத்தை நவில்வதற்கும் நமக்கு அடிப்படைச் சான்றாதாரமாக விளங்குகிறது.

இத்தகைய சிறப்புப் பெற்ற தொல்காப்பியத்திற்கு உரைகள் கி.பி. ,10-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் எழுதப்பட்டன. தொல்காப்பியப் பெருமைக்கு உரையாசிரியர்களின் பங்களிப்பு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியத்திற்குப் பண்டைய உரையாசிரியர் உரைகளோடு இன்றுவாழும் அறிஞர்களும் உரை எழுதி வருகின்றனர். இத்தகைய பெருமை பெற்றது தொல்காப்பியம்.

தொல்காப்பிய உரைகள் அனைத்தையும் தொகுத்து ஒரே நூலாக வெளியிட வேண்டும் என்ற நோக்கில் திராவிடப் பல்கலைக் கழக இணைவேந்தரான வ.அய். சுப்பிரமணியம், ஆபிரகாம் அருளப்பன் ஆகிய இருவரும் சொல்லதிகாரத்தின் முதல் பகுதிக்கு முதன் முதலாக உரைவளம் வெளியிட்டனர்.

இம் முயற்சியைத் தொடர்ந்து உலகத் தமிழாராய்ச்சி நிறுவன மேனாள் இயக்குநர் முனைவர் ச.வே. சுப்பிரமணியன் அவர்கள் இந்நிறுவனத்தின் 'தொல்காப்பியத் திட்டப் பணிக்கு' வித்திட்டார். பேராசிரியர் ஆ. சிவலிங்கனார் அவர்கள் தொல்காப்பிய உரைகள் அனைத்தையும் தொகுத்து ஒவ்வொரு இயலையும் தனி நூலாக்கித் தந்து இத்திட்டத்தை வெற்றி பெறச் செய்தார். இந்நிலையில் 27 இயல்களையும் நிறுவனம் வெளியிட்டுள்ளது. இங்ஙனம் தமிழ் மொழியின் சீரிளமைத் திறத்திற்கு அடித்தளமாக அமைந்த தொல்காப்பியத்தைப் பரப்பும் பணியில் இந்நிறுவனம் நீண்ட காலமாகப் பணி செய்து வருகிறது.

மேலும் தமிழ் அறியாதவர்களுக்குத் தொல்காப்பியத்தின் பெருமையை அறிவிக்க நிறுவனம் ஆங்கிலத்திலும் நூல் வெளியிட்டுள்ளது. இந்நிறுவனத்தில் பணியாற்றிய பேராசியரிர் ஆல்பர்ட் அவர்கள் தொல்காப்பியம், எழுத்து, சொல் ஆகிய அதிகாரங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். அவரது

"Tholkappiyam-phonology, morphology" எனும் நூலை இந்நிறுவனம் 1985இல் வெளியிட்டுள்ளது.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித் துறைத் தலைவராகப் பணியாற்றிய பேராசிரியர் முனைவர் அ.அ. மணவாளன் அவர்கள் நுண்மாண் நுழைபுலம் பெற்றவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை மிக்கவர். மொழியியல், ஒப்பிலக்கியம் முதலிய துறைகளில் ஆழ்ந்த புலமை மிக்கவர். இவர் இந்நிறுவனத்தின் தொடக்கக் காலத்தில் கல்விசார் அலுவலராகப் பணியாற்றி இந் நிறுவனத்திற்குப் பெருமை சேர்த்தவர். இவரது கட்டுரைகளும் நூல்களும் ஆழமும் தரமும் சிறப்பும் வாய்ந்தவை. Tamil Research Through Journals, **20ஆம் நூற்றாண்டு இலக்கியக் கோட்பாடுகள்** முதலிய நூல்களை இந்நிறுவனம் முன்னரே வெளியிட்டுள்ளது.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட வேண்டும் என்னும் விழுமிய எண்ணத்தில் இந் நிறுவனத்தில் வருகைதரு பேராசிரியராகப் பணியாற்றிய முனைவர் அ.அ. மணவாளன் அவர்கள் '**தொல்காப்பியப் பொருளதிகாரம் கருத்துரையும் ஆங்கில மொழிபெயர்ப்பும்**' (அகத்திணை இயல்-புறத்திணை இயல்) எனும் திட்டப் பணியினைச் செய்து அளித்துள்ளார். இத்திட்டப்பணி இப்போது நூலாக வெளிவருகிறது.

நிறுவன வளர்ச்சியில் ஆக்கமும் ஊக்கமும் காட்டி வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி-பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் முனைவர் மு.தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறைச் செயலாளர் திருமிகு. த.இரா. சீனிவாசன் இ.ஆ.ப. அவர்களுக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றி.

இந்நூலினை நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த பாவை அச்சகத்தார்க்கு எங்கள் நன்றி.

முனைவர் ச.சு. இராமர் இளங்கோ

முன்னுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 1997–1998ஆம் ஆண்டில் வருகைதரு பேராசிரியராகப் பணியாற்றிய பொழுது நிறுவன இயக்குநர் டாக்டர் ச.சு. இராமர் இளங்கோ அவர்களின் கருத்துப்படி மேற்கொண்ட ஆய்வுத் திட்டத்தின் பயனாகத் "தொல்காப்பியப் பொருளதிகாரம் - கருத்துரையும் ஆங்கில மொழி பெயர்ப்பும்" என்னும் இந்நூல் வெளியிடப்படுகிறது. பொருளதிகாரத்திற்கு நிறுவனம் மூலமாக ஓர் ஆங்கில மொழிபெயர்ப்பு செய்யப்பட வேண்டும் என்னும் நோக்கத்தில் மேற்கொண்ட திட்டமாயினும் தமிழ் வடிவத்தையும் ஆங்கில வாசகர்கட்கு அளிக்க வேண்டுமென்னும் கருத்தாலும், தொல்காப்பிய நூற்பாக்கள் கருதும் பொருளைச் சுருக்கமாகத் தமிழில் தருவது தமிழ் வாசகர்கட்கும் பயன்படும் என்னும் எண்ணத்தாலும் இந்த நூலில் தமிழ், ஆங்கிலம் என்னும் இருவகை வடிவங்களும் தரப்பட்டுள்ளன. மேலும், மூலநூல் கருத்தை உள்ளவாறு எடுத்துரைக்கும் வாய்ப்பை மிகுதிப்படுத்தும் என்னும் மொழிபெயர்ப்புக் கோட்பாட்டிற்கு ஏற்பவும் இம்முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொருளதிகாரத்திற்கு இதுவரை பல ஆங்கில மொழி பெயர்ப்புகள் வெளிவந்துள்ளன. அவையாவன:

1. இ.எஸ். வரதராஜ அய்யர்.
   அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் 1948.

2. பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரி
   அகத்திணையியல், புறத்திணையியல் 1950 களவியல், கற்பியல், பொருளியல் மெய்ப்பாட்டியல், உவமையியல், 1952. செய்யுளியல், மரபியல் 1956.

3. எஸ். இலக்குவனார், பொருளதிகாரம் முழுமையும் 1963.

4. நிர்மல் செல்வமணி. அகத்திணையியல் 1989.

இவை தவிர, R. வாசுதேவ சர்மாவும் வித்துவான் வடிவேல் பிள்ளையவர்களும் அகத்திணை, புறத்திணை இயல்களை முறையே 1933, 1934 ஆம் ஆண்டுகளில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளதாக நிர்மல் செல்வமணி அவர்கள், மேற் குறிப்பிட்ட தம் நூலின் முன்னுரையில் குறித்துள்ளார். இவ் இரு மொழி பெயர்ப்புகளையும் காணும் பேறு எனக்கு வாய்க்கவில்லை. மேலே சுட்டிய நான்கு

மொழிபெயர்ப்புகளை மட்டும் ஆழமாகப் படித்துப் பார்க்கும் வாய்ப்பினைப் பெற்றேன். என்னுடைய இந்தச் சிறு மொழிபெயர்ப்புப் பணிக்கு இவை நான்கும் உடன்பாடு, எதிர்மறை என்னும் இரு நிலைகளிலும் பயன்பட்டுள்ளன. இம் முன்னோர்க்கு என் உளமார்ந்த நன்றி.

ஈரைந்து திங்களில் பகுதி நேரமாகச் செய்யப்பெற்ற இரண்டே இயல்களுக்கான இந்த மொழிபெயர்ப்பு பல்வேறு வகையான சிக்கல்களை இனங் காணும் வாய்ப்பினை எனக்கு நல்கியுள்ளது. "கம் விண்ட் கம் வெதர்" என்னும் விவிலியம் சார்ந்த விரிவுரையை மொழி பெயர்த்த போதும் (1961), வங்கியியல், வரலாறு ஆகிய துறைகளைச் சார்ந்த பாடநூல்களை மொழிபெயர்க்கும் பணியில் மொழியாசிரியனாகச் செயற்பட்டபோதும் (1963), சிந்தனையாழத்தின் சிகரமான அரிஸ்டாடிலின் "கவிதையியலை" மொழிபெயர்த்த போதும் (1976), சிலம்பு, மணிமேகலை, கம்பராமாயணம் ஆகிய காப்பியப் பகுதிகள் பலவற்றை ஆய்வு நோக்கில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த போதும் (1979), தெலுகு மகா கவிகளுள் ஒருவராகிய போதனரின் கற்பனை சார்ந்த காப்பியம், தண்டகம் போன்ற நூல்களைப் பற்றிய திறனாய்வு நூலை மொழி பெயர்த்த போதும் (1981), சிலப்பதிகாரம், மில்டனின் 'துறக்கவீழ்ச்சி' ஆகிய காப்பியங்களின் முறையே ஆங்கில, தமிழ் பெயர்ப்புகளைச் சீர்தூக்கும் ஆய்வேடுகளுக்கு வழிகாட்டியாகச் செயற்பட்ட போதும் தோன்றாத் பல ஐயங்கள், எதிர் கொள்ளாத பல சிக்கல்கள் பொருளதிகார மொழி பெயர்ப்பின் போது என்னை மருட்டின. இந்த ஐயங்களைத் தெளிவித்துக் கொள்ளவும், சிக்கல்களை விடுவித்துக் கொள்ளவும் வேண்டித் தொல்காப்பிய அறிஞர்கள் சிலரையும், தொல்காப்பியம் பற்றிய ஆய்வுரைகள், நூல்கள் சிலவற்றையும் அணுகினேன் ஐயங்கள் சில அகன்றன. பல என்னைக் கண்டு இரங்கின. சிக்கல்கள் சில அவிழ்ந்தன; பல சிலந்தி வலைபோல மீண்டும் பின்னிக் கொண்டன. நான் சந்திக்க இயலாத அறிஞர்களாலும், நான் பார்த்துப் பயனடையாத சில நூல்களாலும், இனி வரும் மொழிபெயர்ப்பாளர்களாலும், தெளிவிக்கப்படலாம், தீர்க்கப்படலாம் என்னும் நம்பிக்கையின் அடிப்படையில், இப்பணியில் நான் எதிர் கொண்ட சிக்கல்களில் இன்றியமையாத சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இருவகைச் சிக்கல்கள்

பொதுவாக மொழிபெயர்ப்புப் பணியில் இருவகையான செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. ஒன்று, தரு மொழிப் பாடத்தின்

பொருளை (மூலநூற்பொருளை) உள்ளவாறு உணர்ந்து கொள்ளுதல்; மற்றது, அவ்வாறு உணர்ந்து கொண்ட மூலப் பொருளை மற்றொரு மொழியின் வடிவத்திற்குப் பெயர்த்து (மாற்றி) அமைத்தல். இவற்றுள் மூல நூற்பொருளை உணர்ந்து கொள்வதில் எதிர்ப்படும் சிக்கல்களை மொழிபெயர்ப்புச் சிக்கல்கள் என்று கூறுவதில்லை. மொழிமாற்றி அமைப்பதில் ஏற்படும் சிக்கல்களே அவ்வாறு அழைக்கப்படுகின்றன. எனவே மூலநூலுக்குப் பொருள் காணுதல் (interpretation), கண்ட பொருளைக் கண்டவாறே பிற மொழிக்கு ஏற்றுதல் (translation) என்னும் இருவகைச் செயற்பாடுகளுக்கு ஒரு மொழி பெயர்ப்பாளன் இலக்காகிறான். இவ் இரு வகைச் செயற்பாடுகளிலும் நேரும் சிக்கல்களை எதிர் கொண்டு, அவற்றை விடுவித்துத் தன் பணியை நிறைவேற்றும் கடமையுடையவனாக மொழிபெயர்ப்பாளன் விளங்குகிறான்.

தருமொழிப் பாடப் பொருளை உணர்ந்து கொள்ளுதல்

இப்பணி தருமொழிப் பாடத்தின் தன்மைக்கு ஏற்ப வேறுபடும் இயல்பினது. பாடப் பொருண்மை, நூலின் வடிவம் என்னும் இரு கூறுகளுக்கேற்பப் பொருள்காணும் பணி அமையும். தொல்காப்பியப் பொருளதிகாரத்தைப் பொறுத்த வரையில், இந்த இரு கூறுகளுமே பொருள்காணும் பணியைக் கடினமாக்குகின்றன. கால இடையீடு, ஏடெழுதுவோர், நூலின் வடிவத்தில் எதிர்ப்படும் கலைச் சொற்கள், பாடவேறுபாடுகள், பாடச் சிதைவு போன்ற பல காரணங்களால் பொருளதிகார நூற்பாக்கள் சிலவற்றிற்குப் பொருள் காணும் முயற்சியில் முழு வெற்றியைக் காண இயலவில்லை. கால இடையீடும், ஏடெழுதுவோரும், பாடபேதங்களும் இல்லாமல், வினையின் நீங்கி விளங்கிய அறிவினையுடைய முனைவனாகிய அழல் நிறக் கடவுளால் “சுடச் சுடத் தயாரித்து” வழங்கப் பெற்றது எனக் கருதப்படும் இறையனார் களவியலுக்கு உரை காண்பதில், ஒருமித்த கருத்தின்றி நாற்பத்தொன்பது உடன்காலப் புலவர்கள் இடர்ப்பட்டுக், காரணிகன் ஒருவனை வேண்டி நின்றனர் என்னும் தமிழில் எழுந்த முதல் உரைகாரரின் கூற்றை நோக்கும்போது, கால இடையீடு முதலான மூன்றும் நிறைந்த பொருளதிகாரத்திற்கு உரை காண்பதில் நேர்ப்படும் சிக்கல்களை எளிதில் உணர்ந்து கொள்ளலாம்.

மூலபாடச் சிதைவுகள்

பொருள் தொடர்ச்சிக்குத் தேவையான நூற்பாக்கள் காணப்படாமை, நூற்பாக்களின் முறைவைப்பு கருத்தோட்டத்திற்கு இயையப் பொருந்தாமை, பொருளை விரித்துரைக்கும்

நூற்பாக்களிடையே சீர்மைத் தன்மை காணப்படாமை, நூற்பாக்கள் சிதைந்த நிலை, பல்வேறு பாட வேறுபாடுகளைக் கொண்டிருத்தல் எனப் பல நிலைகளில் பொருளதிகார மூலம் சிதைவுபட்டிருக்கக் காண்கிறோம். இத்தகைய சிதைவுகள் அகத்திணை இயலில் மிகுதியாகவும், புறத்திணை இயலில் சிலவாகவும் காணப்படுகின்றன. இத்தகைய நிலையில் உரைவேறுபாடுகள் தோன்றுவதைத் தவிர்க்க இயலாது. அகத்திணை முதலாக மரபியல் ஈறாக உள்ள ஒன்பது இயல்களின் முறைவைப்பில் உரைகாரர்களிடையே வேறுபாடு காணப்படவில்லை. நூற்பாக்களின் எண்ணிக்கையிலும், அவற்றிற்குப் பொருள் காண்பதிலும் கருத்து வேறுபாடுகள் மலிந்து காணப்படுகின்றன.

சிதைவுகளும், பாடபேதங்களும், மற்றொன்று விரித்தலும் குறைந்த அளவில் காணப்படுவதாலும், தொல்காப்பியம் முழுமைக்கும் தோன்றிய முதல் உரை என்பதாலும், கழகப் பதிப்பான (1953), இளம் பூரணர் பாடமும் உரையும் இந்த மொழிபெயர்ப்புக்கு அடிப்படைகளாகக் கொள்ளப்பெற்றன. இளம் பூரணரின் பாடப்படி, அகத்திணை இயலின் முதலில் உள்ள "கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய் முற்படக் கிளந்த எழுதிணை என்ப" என்னும் இந்த நூற்பா இந்த இயலின் தலைச் சூத்திரம் தானா, இதற்கு முன்னர் வேறு சில நூற்பாக்கள் இருந்தனவா என்னும் ஐயம் எழுகிறது. "முற்படக்கிளந்த" என்னும் தொடருக்குப் பொருள் காண்பதிலும் சிக்கல் ஏற்படுகிறது. உரையாசிரியர்கள் பலரும் இதனைத் தலைச் சூத்திரமாகவே கருதி", "முற்படக் கூறப்பட்ட (முதன் முதலாகக் கூறப்பட்ட) ஏழு திணைகள்" எனப் பொருள் கண்டுள்ளனர். நாவலர் சோமசுந்தர பாரதியார்,

> "பொருட்படலத்தின் முதலில், பொருள், அகம், புறம் என இருவகைப்படும் என்பதும், அவற்றுள். . . அகத்திணை ஏழா மென்பதும் அவ்வகத்திணையும் கைக்கிளை, அன்பினைந்திணை, பெருந்திணை என ஏழாக வகுக்கப்படுமென்றும், ஆகிய இவற்றைச் சுட்டிய சில சூத்திரங்கள் அகத்திணையின் முதற்கண் இச்சூத்திரத்திற்கு முன்னே ஆசிரியரால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். . . "முற்படக் கிளந்த" என்னும் தொடருக்கு, "இதற்கு முன்னே ஆசிரியர் கூறிப்போந்த என்று அமையப் பொருள் காண்பதே பொருத்தமாகும்." என்று கூறுவதை நோக்க இது தலைச் சூத்திரம் தானா என்னும் ஐயம் வலுவடைகிறது. முற்படக் கிளத்தல் என்னும் சொற்றொடர் தொல்காப்பியத்துள்

சொல்லதிகாரத்தில்,

முற்படக் கிளவார் (38), முற்படக் கிளத்தல் (39)
முற்படக் கிளவார் (41) முற்படக் கிளத்தல் (279)

என நான்கிடங்களில் பயின்றுள்ளது. இந்த நான்கிடங்களிலும் "முன் கூறி, முன் சொல்லி" என்று இளம்பூரணர் பொருள் காண்கிறார். பொருளதிகாரத்தில்,

முற்படக் கிளந்த எழுதிணை (1)
முற்பட வகுத்த இரண்டு (178)

என இரண்டு இடங்களிலும் 'முற்கிளந்த' (486) என ஓரிடத்திலும் இத் தொடர் பயின்றுவரக் காண்கிறோம். இவற்றுள் 'முற்பட வகுத்த' என்பதற்கு முற்படக் (அகத்திணையியலுள்) கூறிய எனவும், 'முற்கிளந்த' என்பதற்கு மேற் சொல்லப்பட்டன என்றும் இளம்பூரணர் பொருள் காண்கிறார். இவ்வாறு ஆறு இடங்களில் முன் கூறிய, முன் சொன்ன, மேலே சொல்லப்பட்ட என்று பொருள் காணும் இளம்பூரணர், இந்த முதற் சூத்திரத்திற்கு மட்டும் அவ்வாறு பொருள் கொள்ளாமல் 'முதலில் கூறப்பட்டன' (பின்னர்க் கூறப்படுவன புறத்திணைகள்) என்று பொருள் காண்பது நம் சிந்தனைக்குரியதாக அமைகிறது. நாவலர் பாரதியார் "முன்னே சொல்லப்பட்ட" என்று பொருள் காண்கிறார். (காண்க.அடிக்குறிப்பு-1). எனவே இந்த நூற்பாவிற்கு முன்னர்ச் சில நூற்பாக்கள் இருந்திருக்க வேண்டும் என்னும் பாரதியாரின் கருத்து மேலும் வலுவடைகிறது. இதனை மறுத்து மு.அருணாசலம் தம் பதிப்பில் (பக்.35-36) கூறும் வாதங்கள் பொருத்தமானவையாகத் தோன்றவில்லை. பொருளதிகாரம் முழுவதையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ள பி.சா.சு. சாஸ்திரியார், 'முற்படக் கிளந்த' என்னும் தொடருக்கு, "முன்னோர்களால் பாகுபாடு செய்யப் பெற்ற" என்று பொருள் கூறி, இச் சிக்கலை விடுவிக்க முயல்கிறார். ஆனால் மொழிபெயர்க்கும் போது 'முன்னே கூறப்பட்ட' (mentioned before) என்று கூறுகிறார். 'என்ப' என்னும் பயனிலையே இப்பாகுபாடு தொல்காப்பியர்க்கு முந்திய இலக்கணிகளால் செய்யப்பெற்றது என்பதை வெளிப்படையாக உணர்த்துவதால் சாஸ்திரியாரின் விளக்கம் மிகையாகத் தோன்றுகிறது.

எஞ்சி யோர்க்கும் எஞ்சுதல் இலவே (45)

என வரும் அகத்திணைஇயல் நூற்பா, பிரிவின்கண் கூற்றுக்குரியரான நற்றாய், தோழி, கண்டோர், தலைவன் ஆகியோரின் கூற்றுகளைக்

கூறும் நூற்பாக்களை அடுத்து வைக்கப்பட்டுள்ளது. தலைவி கூற்றுகளைக் கூறும் தனி நூற்பா காணப்பெறவில்லை. எஞ்சியோர் என்னும் சொல் தலைவி, பாங்கன், பார்ப்பார், பாணன், கூத்தர் போன்றோரைக் குறித்து நிற்கிறது என நச்சினார்க்கினியர் முதலான பழைய உரையாசிரியர்களும், இக்காலக் காண்டிகை உரையாசிரியராகிய பால சுந்தரனாரும், உரைவளம் பதிப்பித்த மு. அருணாசலம் பிள்ளை அவர்களும் கருதுகின்றனர். இளம் பூரணர் தம்முடைய விளக்க உரையில்,

> பாங்கர் முதலாயினாரை இச் சூத்திரத்தாற் கூறுப;
> தலைமகள் கூற்றுத் தனித்துக் கூறல் வேண்டும்,
> இவரோடு ஒரு நிகரன்மையின் எனின், ஒக்கும்.
>
> தலைமகள் கூற்று உணர்த்திய சூத்திரம்
> காலப் பழமையாற் பெயர்த்தெழுதுவார் விழ எழுதினார்
> போலும்.
>
> ஆசிரியர், இச்சூத்திரத்தானும் பொருள் கொள்ள வைத்தமை
> யின், தலைமைகள் கூற்று வருமாறு:

என்று கூறுவதை நோக்கத் தலைவிக்கு இவ்விடத்தே தனிச் சூத்திரம் கூற வேண்டும் என்பதும், அத்தகைய சூத்திரம் ஒன்று இருந்து ஏடு பெயர்த்து எழுதுவோரால் விடப்பட்டிருக்க வேண்டும் என்பதும், அவருடைய துணிபுகளாகப் பெறப்படுகின்றன. நாவலர் சோம சுந்தர பாரதியாரும் இக்கருத்தை உடன்பட்டுக் கூறுகிறார் (மு. அருணாசலம் பிள்ளை, தொல்காப்பியம் – அகத்திணையியல், மதுரைப் பல்கலைக்கழகம் 1975, ப.486)

உடன் போக்கில் கூற்றுகள் நிகழ்த்தும் சிறுபான்மையோரில் தலைவியும் ஒரு பாத்திரமாகையால் அவள் கூற்றுகளைப் பற்றிய தனிச் சூத்திரத்தைத் தொல்காப்பியர் கூறவில்லை என்று மு. அருணாசலம் பிள்ளையவர்களும் (ப. 492), தலைவிக்குரிய பொதுக்கிளவிகள் அரியவாகலின் தலைவி கூற்றினை விதந் தோதவில்லை என்று பாலசுந்தரனாரும் (ப. 104) கூறி இளம் பூரணர் மற்றும் பாரதியாரின் கருத்துகளை மறுத்துள்ளனர். இங்கு அதிகாரப்படும் பொருள் உடன்போக்கு என்னும் அருணாசலம் பிள்ளையின் கருத்தை இந்நூற்பாவுக்கு முன்னுள்ள ஓதல் முதலான பிற பிரிவுகளைப் பற்றிய தலைமகன் கூற்றுகளே வலுவிழக்கச் செய்வதாலும், விதந்தோதப்பட்ட கண்டோர்க்குரிய கூற்றுகளுக்கு ஏழு சான்றுகள் காட்டும் பாலசுந்தரனார், இந்த நூற்பாவில்

தலைவிக்குரிய கூற்றுகளுக்கு ஆறு சான்றுகள் காட்டுவதாலும், இளம்பூரணர் தலைவி கூற்றுக்கு உரியனவாகப் பதினான்கு இலக்கியச் சான்றுகள் தருவதாலும், தலைவிக்குரிய பொதுக்கிளவிகள் அரியன என்னும் பாலசுந்தரனாரின் கருத்தும் வலுவற்றுப் போவதாலும், இவ் இருவரின் வாதங்கள் ஏற்றுக் கொள்ளக்கூடியனவாக அமையவில்லை. இனிப் புறத்திணை இயலின் முதற்கண் அமைந்துள்ள,

> **அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்**
> **புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்**
> **வெட்சி தானே குறிஞ்சியது புறனே**
> **உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே.**

எனவரும் நூற்பாவும் சிதைவுற்றிருக்கலாமோ என்னும் ஐயம் தோன்றுகிறது. ஓர் இயலின் தலைச் சூத்திரம் அவ் இயலின் பொருண்மை பற்றிய விளக்கம் அல்லது வரையறை, வகை அல்லது பாகுபாடு போன்றவற்றைத் தரும் மரபினது என்பதைக் களவியல், கற்பியல், மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல் என்னும் இயல்களின் முதற் சூத்திரங்களால் அறியலாம். இந்த நூற்பாவில் புறத்திணையின் வரையறையோ, பாகுபாடோ தரப்படவில்லை. மாறாக, எடுத்த உடனே வெட்சி குறிஞ்சியது புறன் என்றும் அதன் துறைகள் இத்துணையென்றும் நூற்பா கூறுகிறது. மேலும் வஞ்சி முதலாகிய பிற புறத்திணைகளைக் கூறுமிடத்து, அவை புறனாகும் அகத்திணைகளைக் குறிப்பிட்டு, அவ்வத்திணைகளின் ஒழுகலாற்றை வரையறுத்துப் பின்னர்த் துறை வகைகளைத் தொகுத்துக் கூறும் மரபு காணப்படுகிறது. இங்கு மட்டும் முதலில் வெட்சி குறிஞ்சிக்குப் புறன் என்றும், துறை பதினான்கு என்றும் கூறி அடுத்த நூற்பாவில் வெட்சியின் ஒழுகலாற்றைக் குறிப்பிடுவது நூல் செல்லும் நெறிக்குச் சற்று முரணாக இருப்பதைக் காண்கிறோம். (காண்க. சூ59, அடிக்.3).

மூல பாடத்தில் நேர்ந்துள்ள இச்சிக்கலை முதலில் உணர்ந்து விடுவிக்க முயன்றவர் பி.சா.சு. சாஸ்திரியார். புறத்திணை இயலின் முதற் சூத்திரத்தின் முதல் இரண்டு அடிகளுக்குப் பின்னர்ச் சிதைவு ஏற்பட்டது என்றும், அடுத்த சூத்திரத்தின் பகுதியை இதன் மூன்றாம், நான்காம் அடிகளாக வைத்து இரண்டையும் ஒரே சூத்திரமாக ஏடெழுதுவோரால் பின்னப்பட்டுள்ளது என்றும் அவர் கருதுகிறார். முதற் நூற்பா எவ்வாறு இருந்திருக்கலாம் என ஊகித்துச் சாஸ்திரியார் நூற்பாவின் மூன்றாம், நான்காம் அடிகளைக் கீழ்வருமாறு மீட்டுருவாக்கம் செய்கிறார்:

> *** வெட்சி முதலாப் பாடாண் இறுவாய்**
> **முற்படக் கிளந்த எழுதிணை என்ப**

தற்போதுள்ள இறுதி இரண்டடிகளை அடுத்த நூற்பாவாக ஆக்குகிறார். அகத்திணை இயல் முதற் சூத்திரத்தின் சாயலை இங்குக் காணலாம்.

தொல்காப்பிய உரைவள ஆசிரியராகிய சிவலிங்கனாரும் இச்சிக்கலை உணர்ந்து,

> அகத்திணையியலில். . கூறியது போலப் புறத்திணையியல் தொடக்கத்தில்,
>
> * **வெட்சி முதலாக் காஞ்சி யிறுவாய்ப்**
> **பிற்படக் கிளந்த எழுதிணை என்ப.**
>
> என்று கூறியிருத்தல் வேண்டும்.

என்று கூறுகிறார். அகத்திணையியல் நூற்பாவைப் பின்பற்றிச் சாஸ்திரியார் 'முற்படக்கிளந்த' என்று கூற, உரையாசிரியர் மரபினை ஒட்டிப், 'பிற்படக் கிளந்த' என்று சிவலிங்கனார் மீட்டுருவாக்கம் செய்கிறார். ஆயின் பாடாண் திணையை இறுதியாகக் கொள்ளாமல், "காஞ்சி யிறுவாய்" என்று கூறியது ஏன் என்று விளங்கவில்லை.

மேலே சுட்டிய இடங்களில் எல்லாம் மூலபாடம் சிதையவில்லை எனக் கருதும் பாலசுந்தரனார். 'வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்" எனத் தொடங்கும் புறத்திணைச் சூத்திரத்தை அடுத்து,

> * பொருதலைக் கருதிய புறத்திணை மருங்கின்
> மரபொடு வரூஉம் துறையு மாருளவே

என்றாங்கு ஒரு சூத்திரம் இருந்து மறைந்தது போலும் என ஐயுற வேண்டியுள்ளது" (ப. 142) என்று கூறுவதை நோக்கப் பாடச் சிதைவுகள் பொருளதிகார ஏட்டில் ஏற்பட்டுள்ளன என்னும் கருத்தை அவரும் ஏற்றுக் கொள்கிறார் என அறிகிறோம். இத்தகைய நூற்பா ஒன்று இருந்து மறைந்தது போலும் என்னும் பால சுந்தரனாரின் ஊகத்தைத் தி.வே. கோபாலையர் 'தக்கது' என்று கூறி ஏற்றுக் கொள்வதும் குறிப்பிடத்தக்கது. (ஆய்வு முன்னுரை, ப.XXX.)

நூற்பாக்களின் முறைவைப்பு

பாடச் சிதைவுகளைப் போன்று நூற்பாக்களின் முறை வைப்பும் பொருள் காண்பதில் சிக்கல்களைத் தோற்றுவிக்கக் காண்கிறோம். சில நூற்பாக்கள் தம்மளவில் பொருள் உணர்த்தாமல்

தம் முறைவைப்புச் சூழலுக்கேற்பப் பொருள் உணர்த்தும் பாங்கில் அமைந்துள்ளன. காட்டாகக்,

> கலந்த பொழுதும் காட்சியும் அன்ன. (18)
>
> ஏவல் மரபின் ஏனோரும் உரியர்
> ஆகிய நிலைமை அவரும் அன்னர். (26)
>
> மன்னர் பாங்கின் பின்னோர் ஆகுப. (32)
> பொருள் வயின் பிரிதலும் அவர் வயின் உரித்தே (35)
>
> எஞ்சி யோர்க்கும் எஞ்சுதல் இலவே (45)
> முன்னைய நான்கும் முன்னதற்கு என்ப (55)

என வரும் அகத்திணையியல் நூற்பாக்களைச் சுட்டலாம். இந் நூற்பாக்களை இடம் மாற்றி அமைத்தால் அவை கருதும் பொருளும் மாறுபடும் என்பது வெளிப்படை. முதல் உரையாசிரியராகிய இளம்பூரணர் தம் உரையில் இம் முறைவைப்பு குறித்து எதுவும் கூறாமையின் பின்னர் வந்த உரையாசிரியர்களும் தற்போதுள்ள முறைவைப்பினை ஐயுறாமல் தத்தமக்குச் சரியெனத் தோன்றியவாறு உரைகண்டு தம்முள் முரண்படுவாராயினர்.

இத்தகைய மூலபாடச் சிக்கலைக் குறித்து அறிஞர்கள் முன்னரே சிந்தித்துள்ளனர். குறிப்பாக, மு. அருணாசலம் பிள்ளையவர்கள் தம்முடைய உரைவளப் பதிப்பில் கூறுவது சிந்திக்கத் தக்கது:

> ஆசிரியர் நூல் செய்து ஏறத்தாழ ஆயிரத்தைந்நூறு ஆண்டுகள் கழிந்த பின்னரே, இளம் பூரணர் முதலானோர் இந்நூலுக்கு உரையெழுத முற்பட்டனர். இவர்களுக்கு முன்னர் இந்நூலைக் கற்றோரும், கற்பித்தோரும், கையால் எழுதினோரும் ஆக எத்துணையோ ஆயிரவர் இருந்தனராதல் வேண்டும். அவ்விடைக் காலங்களில் தொல்காப்பிய நூற்பாக்களில் என்னென்ன மாற்றங்கள் நேர்ந்தன வென்று முழுதும் நம்மால் இப்பொழுது அறிய முடியவில்லை என்றாலும் உரையாசிரியர் காலத்திற்கு முன்பே சில பல நூற்பாக்கள் இடம் மாறியெழுதப்பட்டும் கோக்கப்பட்டுமிருந்தனவென்று எண்ண இடமிருக்கின்றது. அங்ஙனம் இடமாற்றம் பெற்ற நூற்பாக்களில், 'இருவகைப்பிரிவும்" என்ற இந்நூற்பா முதல், 'முதலெனப்

> படுவது ஆயிருவகைத்தே' என்ற நூற்பா வரையுள்ள ஏழு நூற்பாக்களும் அடங்கும். களவியல், கற்பியல்களிலும் இவ்வாறு இடமாற்றம் பெற்ற நூற்பாக்கள் சில உள்ளன. . .
>
> மாற்றி எழுதப்பட்டும் கோக்கப்பட்டும் ஏட்டில் இருந்தவாறே இளம்பூரணர் முதலானோர் உரையெழுதத் தொடங்கியமையால், ஆற்றொழுக்காக ஆசிரியர் அமைத்திருந்த நூற்பாக்களுக்கு இடர்ப்பட்டுப் பொருள் கூற வேண்டிய இன்றியமையாமை நேர்ந்தது. . . முன்னைய நூற்பாக்களோடு தொடர்பு படுத்திப் பொருள் கூறுதற்கேற்ப இவ்விடத்தில் இருக்க வேண்டிய இந்நூற்பா பதினேழாம் நூற்பாவாக ஏடுகளில் இருந்தமை கண்ட உரையாசிரியர்கள், இஃது இவ்விடத்தில் இருத்தற்கு யாதும் இயைபில்லையே என உணர்ந்து வைத்தும், ஏதோ ஒவ்வொரு வகையில் இயைபும் பொருளும் கூறுவாராயினர். . . அவையெல்லாம் ஆசிரியர் ஆற்றொழுக்காகத் தொடர்பு படுத்தி நூற்பாக்கள் அமைத்திருக்கும் முறைமைக்கு ஏற்றவையாகா. ஆகலின் இந்நூற்பா இவ்விடத்தில் இருத்தலே பொருத்தமாகும் **(அகத்திணையியல், பக். *138–140*).**

பொருளதிகாரம் பல இடங்களில் பலவகையான சிதைவுகளுக்கு உட்பட நேர்ந்துள்ளது என்பதும் அதன் காரணமாகப் பல நூற்பாக்களுக்கு உரிய பொருள் காண்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்பதும் மேற்காட்டிய ஆய்வுரையால் விளக்கமடைகின்றன. இதில் வியப்பென்னவென்றால் ச.சோ. பாரதியார் சில இடங்களில் பாடம் விடுபட்டும் சிதைந்தும் இருக்கலாம் என்று கூறுவதைக் கருத்தளவிலேனும் வாங்கிக் கொள்ள மறுக்கும் அருணாசலம் பிள்ளையவர்கள், "இவ்விடத்தில் இருக்கவேண்டிய நூற்பா," என்றும், "இந்நூற்பா இவ்விடத்தில் இருத்தலே பொருத்தமாகும்" என்றும் வலியுறுத்திக் கூறுவதுதான். இங்கு இவர் குறிப்பிடும் முறையில்தான் தொல்காப்பியர் தம் நூற்பாக்களை அமைத்திருந்தாரா என்பதை நாம் உறுதிப்படுத்த இயலாது. வேறு வகையாகவும் அடைவுபடுத்த வேறொருவர் முயலலாம். எனவே அகத்திணையியலைப் பொறுத்த வரையில் தற்போதுள்ள முறைவைப்பு சில இடங்களில் ஆசிரியரின் கருத்தோட்டத்திற்கும், கருத்து வேறுபாடில்லாத பொருள் காண்பதற்கும் ஏற்ப அமையவில்லை என்பதே இங்குக் குறிப்பிட விரும்பும் செய்தியாகும்.

இளம்பூரணர் உரையில் சிதைவுகள்

மூலத்திற்குக் கண்ட முதலுரை என்பதாலும், வேற்றுவரவால் மிகுதியாகப் பாதிக்கப்படாதது என்பதாலும் பொருள் காண்பதற்குரிய நேரிய உரை என்று கருதிப் பின்பற்றிய இளம்பூரணர் உரையும் பல இடங்களில் சிதைவுற்று இருக்கக் காண்கிறோம். பெயர்த் தெழுதுவார் விழ எழுதினார் போலும் என்று தொல்காப்பிய மூலத்தைப் பற்றிக் கருத்துரைத்த இளம்பூரணர், தம் உரையும் காலப்போக்கில் இவ்வாறு சிதைவுறலாம் என்று குறிப்பாகக் கூறுகிறாரோ என்னவோ தெரியவில்லை. இவரது உரையின் தற்போதைய நிலைக்குச் சில சான்றுகள்:

1. 98 ஆம் சூத்திரவுரையில் 'நன்னய முரைத்தல்' என்பதன்கீழுள்ள 'சேரல் மடவன்னம்' என்ற செய்யுளின் இறுதி அடியிலிருந்து 99ஆம் சூத்திரவுரையில் 'பெற்ற வழி மகிழ்ச்சியும்' என்பதன் கீழுள்ள 'நீங்கிற் றெறூஉம்' என்னும் செய்யுள் வரையும் காணும் பகுதி ஏட்டுப் பிரதியிற் காணப்பெறவில்லை; காலஞ்சென்ற த.மு. சொர்ணம் பிள்ளையவர்களுடைய கடிதப் பிரதியில் மாத்திரம் இருந்தது; நச்சினார்க்கினியரது உரையினின்றும் எடுத்துச் சேர்க்கப்பட்டுள்ளது எனக் கருதுவதற்கு இடமுண்டு.

   இதன் பின்னர் 'ஒடுங்கீரோதி' என்பதிலிருந்து 100 ஆம் சூத்திரவுரை முடியவுள்ள பகுதியிற் பெரும்பாலும் ஏட்டுப் பிரதியிற் பலவாறாகப். பிறழ்ந்து காணப்படுகிறது. இது பொருள் தொடர்பு நோக்கி ஒருவாறு செப்பஞ் செய்யப்பெற்றுள்ளது. (கழகப் பதிப்பு 1956, அடிக்குறிப்பு, ப.175)

2. இங்கிருந்து 1¾ பக்கம் ஏட்டில் எழுதப் பெறாது விடப்பட்டுள்ளது. 'புணர்ந்துடன் போகிய' என்ற சூத்திரமும், 'பெறற்கரும்' என்ற சூத்திரமும் அதன் முதலிரண்டு அடிகளின் உரையும் மறைந்து விட்டன போலும். இப்பகுதிக்கு நச்சினார்க்கினியத்தைத் தழுவி உரையெழுதி (இ.மு.சோ) சேர்த்திருக்கின்றனர். இங்கே தரப்படுவது அவ்வாறு சேர்க்கப்பெற்றதேயாம். 'குற்றமில்லாத் தலைமைகளைச் சுட்டிய தெய்வக் கடன் கொடுக்கவேண்டுமென்றலாம்' என்பது தொடங்கி ஏட்டுப் பிரதியிற் காணப்படுகிறது. (மு. நூல். ப. 282 அடிக்.).

3. முற்குறிப்பிட்ட கழகப்பதிப்பில் பக்கங்கள் 176, 177, 179 போன்று பல இடங்களில் இத்தகைய குறிப்புகள் காணப்படுகின்றன.

இத்தகைய அடிக்குறிப்புகளைப் பொறுப்போடு தந்துதவிய சைவ சித்தாந்தக் கழகம் பாராட்டுக்குரியது. இளம்பூரணர் கொண்ட தொல்காப்பியப் பாடமும் அவரது உரையும் பல இடங்களில் நச்சினார்க்கினியரின் பாடமும் உரையுமாக அமைந்துள்ள உண்மையை அறிய இந்தக் குறிப்புகள் பெரிதும் உதவுகின்றன.

4. ... இதற்குப் பொருள் கூறுதலில் இடர்ப்பாடு நேர்ந்தது. அதனால் இந்நூற்பாவிற்குப் (கலந்த பொழுதும் காட்சியும் அன்ன) பதவுரை கூறாது விடுத்தனர். வ.உ.சி. பதவுரையமைத்து அஃது இளம்பூரணர் எழுதிய குறிப்புகளைக் கொண்டு தாமே அமைத்தது என்பதனை யறிவித்தற்கு அதனை இருதலைப்பகரத்துள் அடக்கிக் காட்டினர். பின்னர் வந்த பதிப்புக்களில் அவ்விருதலைப் பகரம் எடுக்கப்பட்டமையின் அவ்வுரையும் இளம் பூரணர் எழுதியதே என்றெண்ணுமாறுள்ளது. இதுபோல் வனவற்றைப் பின்னர்ப் பலவிடங்களிலும் காணலாம். (அகத்திணையியல், ப.198)

மு. அருணாசலம் பிள்ளையவர்களின் இக்குறிப்பை நோக்க, இளம்பூரணரின் உரையாகத் தற்போது நமக்குக் கிடைத்திருப்பதில் பிற்காலத்தவரால் எழுதிச் சேர்க்கப் பெற்ற பகுதிகளும் அடங்கியுள்ளன என்னும் உண்மை புலப்படுகிறது. இனி, பொருள் கூறுவதில் இளம்பூரணர்க்கு இடர்ப்பாடு நேர்ந்தது. அதனால் இந்நூற்பாவிற்குப் பதவுரை கூறாது விடுத்தனர் என்னும் மேலைய கூற்று இளம்பூரணர் பதவுரை கூறாத நூற்பாக்களுக்கு எல்லாம் (காட்டாக, நூற்பா, 101, 102, 103, 106, 107, 108) பொருந்துமா என்பதும், அவர் உரையில் காணப்பெறும் பதவுரைகள் எல்லாம் அவருடையவை தாமா என்பதும், பிற்காலத்தே பதவுரை எழுதிச் சேர்த்தவர்கள் மேலே சுட்டிய நூற்பாக்களுக்கும் ஏன் பதவுரை எழுதிச் சேர்க்கவில்லை என்பதும் நம் சிந்தனைக்குரியவனவாக அமைகின்றன.

இளம்பூரணரின் உரையைத் தழுவியே இந்த மொழிபெயர்ப்பில் கருத்துரை தரப்பட்டுள்ளது. எனினும் மேலே சுட்டிய சிதைவுகளின் காரணமாகச் சில இடங்களில், இளம்பூரணரின் உரை பொருத்தமாகக் காணப்படாததால் பிறருடைய உரைகளில்

பொருத்தமானவை என்று கருதப்பட்டவை தரப்பட்டுள்ளன. சான்றாக நூற்பாக்கள் 63,77,83 ஆகியவற்றுக்குத் தரப்பட்டுள்ள உரையையும் அவற்றிற்குரிய அடிக்குறிப்புகளையும் சுட்டலாம்.

தற்போதுள்ள உரைகளில் எதுவும் நூற்கருத்தோடும் தொல்காப்பியர் கால இலக்கியச் சூழலோடும் பொருந்தவில்லை என்று கருதிய நிலையில் இம்மொழிபெயர்ப்பாளரின் புதிய உரையும் அறிஞர்களின் சிந்தனைக்காக அடிக்குறிப்பில் தரப்பட்டுள்ளது. சான்றாக, நூற்பா 82 ஐயும் அதற்குரிய 39ஆம் அடிக்குறிப்பையும் குறிப்பிடலாம். தற்போதுள்ள முறைவைப்பின் அடிப்படையில் உரையாசிரியர்கள் உரை காண்கின்றனர் என்பதற்கும் முறை வைப்பு மாற்றப்பட்டால் உரையும் மாறுபடும் என்பதற்கும் இதுவுமோர் (நூ. 82) சான்றாக அமைகிறது.

உரை காண முடியாத தனிச் சொற்களும், தொகைச் சொற்களும்

தனிச்சொற்கள் : பாடச் சிதைவுகள், பாட வேறுபாடுகள், உரை வேறுபாடுகள் தவிரச் சில தனிச் சொற்களும், தொகைச் சொற்களும் கூட மூல பாடப் பொருளை உணர்ந்து கொள்வதில் சிக்கலை விளைவிக்கின்றன. சான்றாகச் சிலவற்றைப் பார்க்கலாம்.

ஏனோர் (நூ. 24, 26, 30, 34, 81)
உயர்ந்தோர் (நூ. 28, 33, 36,); அமரர் (79)
மேலோர் (19); கந்தழி, கொடிநிலை, வள்ளி (85)
புறனே (நூ. 59, 62, 64, 66, 70, 73, 76, 78, 130, 245)

இத் தனிச் சொற்களுக்குப் பொருள் காண்பதில் உரையாசிரியர்களும் திறனாய்வாளர்களும் மிகுதியும் வேறுபடுகின்றனர். ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் இவை பயிலும்போது வெவ்வேறு பொருள்தருவதாக உரைகாரர்கள் கருதுகின்றனர் (இந் நூற்பாக்களுக் குரிய அடிக்குறிப்புகளைக் காண்க). புறவயப்பட்ட தரவுகள் (objective data) இல்லாத நிலையில் இச் சொற்களின் பொருள்களை உறுதிப்படுத்த இயலவில்லை.

புறனே

புறன் என்னும் சொல் தொல்காப்பியத்துள் பொருளதிகாரத்தில் மட்டும் பயின்று வந்துள்ளது. புறத்திணை இயலில் எட்டு இடங்களிலும், களவியல், மெய்ப்பாட்டியல்களில் ஒவ்வோர் இடத்திலுமாக மொத்தம் பத்து இடங்களில் வழங்கும் இச் சொல் களவியலிலும் மெய்ப்பாட்டியலிலும் புறத்தே (வெளியே)

என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது. அதாவது புறம் என்னும் சொல்லுக்கு இணையாக, அகராதிப் பொருளில் ஆளப்பட்டுள்ளது. புறத்திணை இயலில் வழங்கும் எட்டு இடங்களிலும் கலைச்சொல்லாகப் பயன்படுத்தப் பெற்றுள்ளதாகத் தெரிகிறது.

ஒவ்வொரு புறத்திணையையும் குறிப்பிட்டு அதனோடு ஒவ்வோர் அகத்திணையையும் புறனே என்னும் சொல்லால் இணைத்துக் கூறப்பட்டுள்ளது. இங்குப் புறனே என்னும் சொல்லால் உணர்த்தப்படும் கருத்து அல்லது கருத்தீடு (concept) இன்னதெனத் தெளிவாக விளங்கவில்லை. உரையாசிரியர்கள் அனைவரும் புறன் என்னும் சொல்லுக்குப் புறம் என்றே பதவுரை தந்துள்ளனர். புறம் என்னும் சொல்லை இவர்கள் எந்தப் பொருளில் வழங்குகின்றனர் என்று அறிய இயலவில்லை. அதனை வெளிப்படைச் சொல்லாகக் கருதினார்கள் போலும். ஒவ்வொரு புறத்திணையும் எந்தெந்த வகையில் ஒவ்வோர் அகத்திணையோடும் இணையாகின்றது என்பதை எல்லா உரையாசிரியர்களும் பேரார்வத்துடன் விளக்கிச் செல்கின்றனர். அவ்விளக்கங்கள் எல்லாம் அவை முதல், கரு, உரிப்பொருள்களால் எவ்வாறு ஒத்த தன்மையினவாய் அமைகின்றன என்று மட்டுமே கூறுகின்றன. முதல், கரு, உரி என்னும் பாடல் அமைப்பு முறை அகத்திணைக்கு மட்டுமே ஓதப்பட்டது என்பது இங்கே நினைவு கூரத்தக்கது.

இந்தச் சமன்பாடு அல்லது வாய்பாடு, அதாவது, 'இதற்கு இது புறன்' என்னும் இலக்கண வரையறை, மறுதலித்து மொழியுங்கால் (அத்தகையதொரு இலக்கண மரபு இல்லை)- அதாவது,

* குறிஞ்சி தானே வெட்சியது அகனே.
* பாலை தானே வாகையது அகனே.

எனக் கூறினால், இதே கருத்தீட்டை அல்லது கோட்பாட்டை உட்கொண்டதாக அமையுமா என்னும் வினா (ஐயமோ, அறியாமையோ) எழுகிறது. இணையானவை என்று உரைகாரர்களால் விளக்கப்படுவதால் இத்தகைய வினா எழுகிறது. தொல்காப்பியமும் வாளா புறனே என்று கூறுகிறதேயன்றி, புறனாதல் என்றால் என்ன என்றோ, எவ்வாறு என்றோ கூறவில்லை. எனவே இக்கருத்தீட்டின் கோட்பாட்டு நுட்பத்தை உணர இயலவில்லை.

மேலும், "அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்" என்று கூறி அகத்திணை மரபைத் தமது புறத்திணைக்

கோட்பாட்டிற்கு அடித்தளமாக வகுத்துக் கொள்ளும் தொல்காப்பியர், "கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்" என நிறுத்திய வகையில் புறத்திணைகளைக் கூறாமல், வெட்சி முதலாகிய புறத்திணைகளை அடியாக நிறுத்திக் கூறுவானேன் என்னும் வினாவும் எழுகிறது. அதிகாரப் படும் பொருள் புறப்பொருளாதலின், புறப்பொருள் நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியைக் கருத்தில் கொண்டு, வெட்சி, வஞ்சி என நிரல்படுத்திக் கூறுவதுதான் பொருத்தமானது என்பதில் ஐயமில்லை. எனினும், பொருளதிகாரம் காட்டும் திணை அடைவு வெட்சி முதல் வாகை ஈறான ஐந்தனது பொருண்மைக்கு மட்டுமே பொருந்துவதாகத் தோன்றுகிறது. காஞ்சி, பாடாண் என்பன முன் பின்னாக மாறியிருப்பினும் முரண்பாடு எதுவும் விளையும் என்று தோன்றவில்லை. எனவே பலர் செலச் செல்லாப் பெருமையுடைய நிலையாமையை விளக்கும் காஞ்சித் திணையை ஏழாவதாக வைத்திருப்பின் பெரிதும் பொருத்தமாக இருக்கும் என்று யதார்த்த நிலைப் பார்வையில் கருதுவதும் கூடும். ஆகப் புறத்திணை அடைவும் அவற்றிற்குரியனவாகக் கூறப்படும் அகத்திணை அடைவும் இதற்கு முன்னர்க் கூறியுள்ள (நூ. 1,5,11) முறைவைப்புகளோடு ஐயத்திற்கு இடமின்றிப் பொருந்துவனவாகத் தோன்றவில்லை.

புறத்திணைகள் பன்னிரண்டு என்னும் கோட்பாடு ஒன்று இருந்து, அதன் பொருந்தாமை கண்டு, அதனை மறுத்துப் புறத்திணைகள் ஏழே என்னும் கோட்பாட்டை நிறுவ முனையுமிடத்து, அகத்திணைகள் ஏழு என்னும் கோட்பாட்டை அடிச்சட்டகமாகக் கொண்டு தொழிற்படும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருப்பதை இங்கே காணலாம்.

இந்த விவாதம் குறித்து அண்மையில் எழுந்துள்ள ஆய்வுக் கண்ணோட்டம் ஒன்றினைச் சற்று விரிவாகச் சுட்டுவது இங்கே கடமையாகிறது:

> பாடலை அலகாகக் கொண்டு பார்க்கும்பொழுது, அகத்திணையில் முதல், கரு, உரி தொழிற் படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. . . புறத்திணைப் பாடல்களுக்கு இத்தகைய ஒரு கொள்கை சுட்டப்பெறவில்லை. எனினும் பல்வேறு போர்நிலைகளும் வீரப்புகழ்ச்சி நிலைகளும் தரப்படுகின்றன.
>
> புறத்திணை பற்றிய இயலிற் காணப்படும் மிக முக்கியமான அம்சம் தொல்காப்பியம் "புறன்" என்பதை இனங்கண்டு கொள்ளும் முறைமையாகும். வெட்சி தானே குறிஞ்சியது

புறனே (1). . . பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே (30). இவ்விடங்களிற் "புறன்" என்பது இயைபு காரணமாகக் கூறப்படும் "இணை நிலைச் சேர்ப்பு" (pairing) ஆகும். அதாவது ஒரு அகத்துக்கு ஒரு புறம் உண்டு என்பது.

நில அடிப்படையைக் கொண்ட அக-புற இணைப்புக்களைப் பார்க்கும்பொழுது, ஒவ்வொரு நிலத்திலும் காணப்படக் கூடிய ஆண்-பெண் உறவுக்கான சமூகச் சூழலுக்கும் அதே நிலத்துக் குரியதான போர் முறைகளுக்கும் ஓர் இயைபு இருப்பது இயற்கையானதே. குறிஞ்சியில் நடைமுறையிலுள்ள சமூக அதிகார ஒழுங்கு முறைகளுக்கும், வெட்சிக்குரியதான போர் முறைமைக்கும் ஓர் இயைபு காணப்படுவது உண்மையே. இது முல்லை, மருத நிலங்களுக்கும் பொருந்தும். . . .

பாலைக்கும் நெய்தலுக்கும் இத்தகைய ஓர் இயைபினைக் காணமுடியாதுள்ளது. நெய்தற் பிரதேசத்திலே தோன்றக்கூடிய அதிகார முறைமைக்கும் இறுதிவரை போராகும் தும்பைக்கும் தொடர்பு காண்பது சிரமம். இத்தகைய "விடாப்பிடிப்" போருக்கான வாய்ப்பு விளைச்சற் சாத்தியப்பாடுகள் அற்ற வெற்று நிலம். பாலையில் உண்டு.

வாகைபற்றித் தொல்காப்பியம் கூறுவனவற்றை நோக்கும்போது அங்கு முற்றிலும் கருத்து முதன்மையானதும் (idealistic) வாகையின் பொருளியல் யதார்த்தத்துக்கும் அப்பாலானதுமான ஒரு கொள்கையாக்கமே (theorisation) காணப்படுகிறது. . .

இதற்கும் மேலாகக், கைக்கிளையையும் பாடாணையும், பெருந்திணையையும் காஞ்சியையும் இணைத்து நோக்குவது ஒரு முரண்நிலைப்பாட்டைக் காட்டுகின்றது. கைக்கிளை பற்றித் தொல்காப்பியம் தரும் விவரணமானது அது ஒரு திரிபு நிலப்பட்ட பாலியல் நிலை என்பதைக் காட்டும். . . இதனை ஆளுமைப் பொலிவைப் பாடும் பாடாணுக்குப் புறனாகக் கொள்ளுதல் வாய்பாடு மயப்படுத்திப் பார்க்கும் ஒரு நோக்காகவே காணப்படுகின்றது. இதே போன்றதே பெருந்திணை- காஞ்சி இணைப்பும். . .இதனை "நில்லா உலகம் புல்லிய நெறித்தே" எனக் காஞ்சியோடு இணைத்தல் பொருத்தமற்றதாகவே காணப்படுகிறது. . .

வாகையை விவரிக்கும் பொழுது கூறும் கருத்துக்களை நோக்கும் பொழுதும் (நூற்பா.புறத்-16) தொல்காப்பியத்திற் காணப்படும் அக-புற இணைப்புக் கொள்கையாக்கம் பொருந்தாது என்பது தெரிகிறது.

வடமொழிச் சமூக இலக்கியப் பாரம்பரியங்கள் சிலவற்றையேனும் முற்றிலும் தமிழ்நாட்டுக்குரியனவான நடைமுறைகளிலே காணும் ஒரு நோக்கினையே காஞ்சி-பெருந்திணை இணைப்பு காட்டுகின்றது.

(கார்த்திகேசு சிவத்தம்பி, "தமிழ்க் கவிதை வரலாற்றில் தொல்காப்பியக் கவிதையியல் - சில வினாக்களும் சிக்கல்களும்", **தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள்,** *(ப.ஆ) செ. லாரன்ஸ் மற்றும் கு.பகவதி, சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1998 பக்70-73).*

தொகைச் சொற்கள்

நால்வர் (31) நாலிரு வழக்கு (74) நாலிரண்டு (78), நான்கு (55) அறுவகை (79). எட்டுவகை (75) என்னும் தொகைச் சொற்களுக்குப் பொருள் காண்பதிலும் உரைகாரர்களிடையே கருத்து வேறுபாடுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. இந்த நூற்பாக்களுக்குரிய அடிக்குறிப்புகளில் இவ் வேறுபாடுகள் விரிவாக ஆராயப் பெறுகின்றன. கால இடைவெளியாலும், பண்பாட்டுக் கலப்பினால் ஏற்பட்ட மாற்றங்களாலும், தொல்காப்பியர் காலச் சமுதாய மரபுகள், வழக்குகள், ஆகியவற்றை இன்று நாம் அறிய உதவத் தக்க குறிப்புகளோ, வரலாற்றுத் தன்மைபெற்ற நூல்களோ இல்லாமையாலும், இது போன்ற தொகைச் சொற்களுக்குப் பொருள் காண்பதில் ஒருமித்த கருத்து தோன்ற வழியில்லாமற் போயிற்று. மிகவும் தொன்மை வாய்ந்த நூல்களிற் பயிலும் சொற்கள் சிலவற்றிற்குப் பொருள் காண்பதில் கருத்துவேறுபாடுகள் தோன்றுவதைப் பழமைசான்ற கிரேக்கம் முதலான மொழிகளிலும் காண்கிறோம். அரிஸ்டாடிலின் கவிதையியலில் வழங்கும் 'கெதார்சிஸ்', அமார்ஷியா', ஆக்ஷன்' என்னும் சொற்களுக்குப் பொருள் காண்பதில் சென்ற நூற்றைம்பது ஆண்டுகளாக இருந்துவரும் கருத்து வேறுபாடுகள் இன்னும் தீர்ந்த பாடில்லை என்னும் செய்தியை இங்கே நினைந்து பார்ப்பது நல்லது.

இவ்வாறு கருத்து வேறுபாடுகள் மலிந்த இடங்களிலெல்லாம் எந்த ஓர் உரையாசிரியரையும் தொடர்ந்து பின்பற்றாமல், நூற்பாவின்

சூழலுக்கு ஏற்றது என்று இந்த மொழிபெயர்ப்பாளன் இன்றைய அறிவுநிலையில் கருதும் பொருள் கருத்துரையாகவும், மொழி பெயர்ப்பாகவும் தரப்பட்டுள்ளது. தக்க புறவயத் தரவுகள் எதிர்காலத்தே கிடைக்கும் வாய்ப்பு ஏற்படின், அறிதோறும் அறியாமை கண்டற்றால் என்னும் வாய்மொழிக்கிணங்க பிறிதொரு பொருள் கொள்ளவும் கூடும்.

சில சங்கடமான சொல்லாட்சிகள்

மூலபாடப் பொருளை உணர்ந்து கொள்வதில் சிக்கலை விளைவிக்காவிடினும், பொருளதிகாரத்தில் ஆளப்பட்டுள்ள சில சொற்கள் வழக்காற்றுச் சிக்கலை உண்டு பண்ணுவனவாய் அமைந்துள்ளன. அவற்றுள் முக்கியமாகப் பெரியவர் (75), தாபதப்பக்கம் (75), தாபத நிலை (77), மூதானந்தம் (77), தபுதார நிலை (77) என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

பெரியவர்

'பெரியவர்' என்னும் சொல் தொல்காப்பியத்தில் ஓர் இடத்தில் (75) மட்டும் வந்துள்ளது. இங்கே இச் சொல் உயர்திணைப் பன்மையாகக் (பலர்பால்) கையாளப்பட்டுள்ளது. சங்க இலக்கியத்துள் நற்றிணையில் மட்டும் ஒரே இடத்தில் (266) வரும் இச்சொல் உயர்வுப் பன்மையாக ஆளப்பட்டுள்ளது. அதன்பின்னர் நாலடியாரில்தான் 'பெரியவர்' என்னும் சொல் 'பலர் பாலாக' வழங்குகிறது. குறிப்பு வினையாலணையும் பெயர்கள் வகர மெய் பெற்று வழங்குதல் தொல்காப்பியர்கால மொழிவழக்கிற்கு உரியதுதானா என்பது நுட்பமாக ஆராயத் தக்கது.

தாபதப் பக்கம், தாபத நிலை

இத் துறைகள் கருதும் புறத்துறைப் பொருண்மைக்கு உரியனவாகப் பல பாடல்கள் புறநானூற்றில் (248-252) கோக்கப்பட்டுள்ளன. நிகழ்ச்சி தமிழ்ப் பண்பாட்டிற்கு உரியதாக இருக்க, இதனைக் குறிக்கும் கலைச்சொல் மட்டும் பிறமொழி கலந்த தொகை நிலையாக உருவானது எவ்வாறு, எப்போது என்னும் வினாக்கள் எழுகின்றன. சங்க இலக்கியத்துள் எங்கும் தாபதன், தாபதர் என்னும் சொற்கள் வழங்கியதாகத் தெரியவில்லை. முதன் முதலாகச் சிலப்பதிகாரத்தில்தான் (26:9, 27:179) இவை வழங்குகின்றன. கீழ்க்கணக்கு நூல்களிலும் இச் சொற்கள் காணப்படவில்லை.

மூதானந்தம்

'மூதானந்தம்' என்னும் சொல்வழக்கு தொல்காப்பியத்துள் ஓர் இடத்தில் மட்டும் காணப்படுகிறது. தொகையாக வழங்கும் இக்கலைச்சொல் தமிழ் இலக்கிய வரலாற்றில் பிற்காலச் சோழர் காலத்திற்கு முன்பு வழங்கியதாகத் தெரியவில்லை. இச் சொல் கருதும் பொருளுக்குரிய நிகழ்ச்சி (கணவன் இறந்ததும் மனைவி உடனுயிர்துறத்தல்) சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றிருந்தும் இக்கலைச்சொல்லின் வழக்கு இலக்கியத்திலோ, இலக்கணத்திலோ இடம்பெறாமையும் சிந்திக்கத் தக்கது. இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் இத்துறைக்குப் பு.வெ. மாலைச் செய்யுளை எடுத்துக்காட்டாகத் தருகின்றனர். இக்கால உரைகாரருள் சோம. இளவரசு மட்டும் சிலப்பதிகாரப் பகுதியை (காதை 20) எடுத்துக்காட்டாகத் தருகிறார். பாலசுந்தரனார் சிலப்பதிகாரச் செய்தியைச் சுட்டுவதோடு அமைந்து, பு.வெ. மாலைச் செய்யுளையே காட்டாகத் தருகிறார்.

இத்தொகையின் பிற்கூறாகிய ஆனந்தம் என்னும் சொல் திருவாசகத்தில் முதன் முதலாக இடம்பெற்றுள்ளது. ஆனந்தம் என்பதை முற்கூறாக்கிப் பையுள் என்னும் தமிழ்ச் சொல்லோடு சேர்த்துத் தொகையாக ஆனந்தப்பையுள் என்னும் துறையைப் பு.வெ. மாலை காட்டுகிறது. இத்துறை மூதானந்தம் என்னும் துறையினின்று வேறுபட்டது.

தமிழும் வடமொழியுமாகத் தொக்குவரும் சொல்மரபு தமிழ் மொழியில் எக்காலத்தில் தோன்றியது என்று கணிப்பதற்குரிய தரவுகள் இப்போது நம்மிடையே இல்லை. செய்யுட்கு உரியனவாக வடசொற்கள் தமிழில் இடம் பெறலாம் என்று இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் இத்தகைய கலப்புத் தொகை நிலைகள் (hybrid compounds) பற்றி எதுவும் கூறவில்லை. தபுதாரம் என்பதும் இவ்வாறு அமைந்த மற்றொரு தொகைநிலை. தாரம் தபுநிலை என்றிருக்கற்பாலது தபுதார நிலை என முன்பின்னாகத் தொக்குநின்றது என்று விளக்கம் கூறும் பாலசுந்தரனாரும் சோம. இளவரசும் இருமொழித் தொகைநிலையின் அமைப்பு (structure) குறித்து எதுவும் குறிப்பிடவில்லை. மேலும் முன் பின்னாகத் தொக்கு வருவது (முன்றில் போல) தமிழ் மொழிக்குக் கூறப்பட்ட இலக்கணம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தபுதார நிலை

தொல்காப்பியத்துள் ஒரேயொரு இடத்தில் மட்டும் வழங்கும் மற்றொரு சொல் தபுதார நிலை (77) என்பதாகும். மூதானந்தம்

என்னும் சொல்லைப் போன்றே இதுவும் தமிழ் - வடமொழித் தொகைநிலையாக ஆளப்பட்டுள்ளது. இதில் வரும் தாரம் என்னும் சொல் 'மனைவி' என்னும் பொருளில் இங்கு வழங்குகிறது. இச் சொல் சங்க இலக்கியத்துள் மிகப் பரவலாக வழங்குகிறது.

> *பெரும்.361; மதுரைக்.290,697; மலை.170,513*
> *நற்.135; பதிற்.48,88; பரி.12; அகம். 171, 282;*
> *புறம் - 343.*

மேற்குறித்த இடங்களிலெல்லாம் இச் சொல் பொருள், பண்டம், அரிய பொருள் என்னும் பொருள்களில் பயன்படுத்தப் பெற்றுள்ளது. சிலப்பதிகாரத்தில் பல இடங்களில் (3 : 72, 76; 6:153; 10:106; 10 கட்டுரை - 15; 17: 48, 53) பயின்றுவரும் இச் சொல் இசை நரம்பு, யாழ் நரம்பு, யாழிசை வகை என்னும் பொருள்களில் வழங்கக் காண்கிறோம். ஆகச் சங்க இலக்கியம், சிலப்பதிகாரம் என்னும் இருதிறத்து இலக்கியங்களிலும் பரந்து வழங்கும் இச்சொல் 'மனைவி' என்ற பொருளில் எங்குமே ஆளப்படவில்லை.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் சிலவற்றில்தான் தாரம் என்னும் சொல் முதன் முதலாக 'மனைவி' என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது (நாலடி. 81,82; ஆ. கோவை. 95; சிறு பஞ்ச. 81; முதுமொழிக். 41,42).

நாலடியாருக்கு மிக விரிவாகவும் ஆழமாகவும் விரிவுரை எழுதியுள்ள செம்பூர் வித்துவான் ஆறுமுகம் சேர்வையவர்கள், "தாரம் - தாரா: என்னும் வடசொற்றிரிபு" என்று குறிப்பிடுகிறார். (நாலடி. 81). சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி (Tamil lexicon), தாரம் dāra என்னும் சொல்லின் தமிழ்வடிவம் என்று குறித்து, மனைவி என்னும் பொருளில் தொல். பொருளதிகாரத்தில் வரும் 'தபுதார நிலை'யில் வழங்குகிறது என்று பதிவு செய்துள்ளது.

dāra என்னும் ஆண்பாற் பன்மைச்சொல், 'மனைவி - மனைவியர்' என்னும் பொருளுடையது என்றும், கால அடைவில் முதன் முதலாக முறையே கிருஹ்ய சூத்திரம், மனுநீதி நூல், மகா பாரதம் ஆகிய நுல்களில் இச்சொல் வழங்கியுள்ளது என்றும் மோனியர் வில்லியம்ஸ் தமது வடமொழி - ஆங்கில அகராதியில் பதிவு செய்துள்ளார்.*

---

* M. Monier - Williams, A Sanskrit - **English Dictionary** (Oxford University Press 1899; rpt. Delhi: Motilal Banarasidass, 1995).

எனவ தற்போதைய தரவு நிலையில், தாரம் என்னும் சொல் 'மனைவி' என்னும் பொருளில் பொருளதிகாரத்தில் வழங்கப்பட்டுள்ளது என்பதும் இப்பொருளில் இச் சொல் சங்க நூல்களிலும் சிலப்பதிகாரத்திலும் வழங்கப்படவில்லை என்பதும் தெளிவாகின்றன.

தபுதார நிலை என்னும் துறைப் பொருண்மைக்குரிய பாடல்கள் புறநானூற்றில் காணப்படுகின்றன; எனினும் புறநானூற்றுக்குத் திணை, துறை வகுத்தோர் தபுதார நிலை என்னும் துறையை எந்தப் பாடலுக்கும் வகுக்கவில்லை. இதனோடு தொடர்புடைய தாபத நிலை என்னும் துறையைப் புறப்பாடல்களுக்குக் காட்டியுள்ளனர். இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகிய இடைக்கால உரையாசிரியர்களும், இக்கால உரைகாரராகிய பாலசுந்தரனாரும் சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதையின் "யாங்குப்பெரிதாயினும் நோயளவு எனைத்தே" எனத் தொடங்கும் புறப்பாடலைத் (245) தபுதார நிலை என்னும் துறைக்கு எடுத்துக்காட்டாகத் தந்துள்ளனர்.

இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் பயன்படுத்திய புறநானூற்று ஏடுகளில் திணை, துறைகள் வகுக்கப்படவில்லையா, அல்லது வகுக்கப்பட்டிருப்பினும் அக்குறிப்புகளை இவ் இரு உரையாசிரியர்களும் ஏற்றுக்கொள்ளவில்லையா என்னும் சிந்தனை நம் உள்ளத்தில் எழுவதைத் தடுக்க இயலவில்லை. புறப்பொருள் வெண்பா மாலையில் தபுதார நிலை என்று ஒரு துறையே குறிப்பிடப்பெறவில்லை என்பதும், ஆனால் தாபத நிலை ஒரு துறையாகக் கொள்ளப்பட்டுள்ளது என்பதும் இதன் தொடர்பில் சிந்திக்கத் தக்கனவாக அமைகின்றன. (காண்க : நூற்பா 82, அடிக் குறிப்பு 39).

மேலே இனங்காட்டிய பெரியவர், ஆனந்தம், தாரம், தாபதம் என்னும் தனிச் சொற்களுக்கும், மூதானந்தம், தபுதார நிலை, தாபத நிலை, தாபதப் பக்கம் என்னும் புறப்பொருள் சார்ந்த கலைச் சொற்களுக்கும் பாடவேறுபாடுகளே இல்லை என்பதும், தொல்காப்பியத்திற்கு உடன் காலத்தனவாகச் சிலராலும், பிந்தியனவாகப் பலராலும் கருதப்படும் சங்க இலக்கியங்களில் இத் தனிச் சொற்களின் ஆட்சி காணப்பெறவில்லை என்பதும் இணைத்துச் சிந்திக்கத் தக்கன. மேலும் மூதானந்தம், தபுதார நிலை என்னும் துறைகளைப் புறப்பாடல்களுக்குத் திணை, துறை வகுத்தோர் காட்டவில்லை என்பதும் புறப்பொருள் வெண்பா மாலையில் இந்த

இரு துறைகளும் குறிப்பிடப்பெறவில்லை என்பதும், ஆனால் பு.வெ. மாலை குறிப்பிடும் ஆனந்தப் பையுள் போன்ற பிற்காலத்துறைகள் பல புறநானூற்றுப் பாடல்களுக்கு வகுக்கப்பட்டுள்ளன என்பதும் இங்கே தொகுத்துச் சிந்திக்கத் தக்கன. தொல்காப்பிய மூல பாடம் பற்றிய சில ஐயங்களைத் தூண்டுவனவாகையால் இவை இங்கே சற்று விரிவாக ஆராயப்பெற்றன.

மூல பாடச் சிதைவுகள், பாடவேறுபாடுகள், நூற்பாக்களின் வைப்பு முறை, பலவாறாகப் பொருள் கொள்ள இடமளிக்கும் தனிச் சொற்கள், தொகைச் சொற்கள், உரை வேறுபாடுகள் என்னும் பல்வேறு நிலைகளில் தருமொழிப் பாடப்பொருளை உணர்ந்து கொள்வதில் எதிர்ப்பட்ட சிக்கல்கள் குறித்து இதுவரை கூறப்பட்டது. இளம்பூரணர் உரையைத் தழுவியே பெரும்பாலும் கருத்துரைகள் அமைக்கப்பட்டிருப்பினும், சில இடங்களில் பிற உரையாசிரியர்களின் உரைகளும் ஏற்றுத் தரப்பட்டுள்ளன என்பதும் விளக்கப்பட்டது.

மொழிபெயர்ப்புச் சிக்கல்கள்

மூலபாடக் கருத்தை உணர்ந்து கொண்ட பின்னர் அதனை வேறு மொழியில் கூறுமிடத்துத் தோன்றும் சிக்கலை மொழி பெயர்ப்புச் சிக்கல் என்று கூறுகிறோம். தொல்காப்பியப் பொருளதிகார மொழிபெயர்ப்பைப் பொறுத்தவரையில் மூலபாடப் பொருளை உணர்ந்து கொள்வதைவிடக் குறைவான சிக்கல்களே அதனை மொழிபெயர்ப்பதில் தோன்றுகின்றன எனலாம். இலக்கியப் புலத்தோடு தொடர்புடையதாயினும், பொருளதிகாரம் ஓர் இலக்கண நூலாதலின் கற்பனை, அணிகள், இறைச்சி போன்ற வெளிப்பாட்டு உத்திகள் என்னும் முருகியல் சார்ந்த பகுதிகள் இதில் இடம்பெறவில்லை. ஒரு பழமையான பண்பாட்டின் இலக்கிய மரபுகளை விளக்கிச் செல்லும் பாங்கில், இலக்கணம், இலக்கியம், சமுதாய வழக்காறுகள், பண்பாட்டு மரபு ஆகியன பற்றிய கலைச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. நூல் கூறக் கருதுவது இலக்கியம் பற்றிய கோட்பாடுகள். எனவே புறவயப்பட்ட கருத்துகளும், பண்பாட்டுச் சிறப்புடைய சொற்களும், கலைச்சொற்களும்தான் இங்கு மொழிபெயர்க்கப்பட வேண்டியவை.

மொழிபெயர்ப்புப் பொதுமை (translation equivalence) கொண்ட சொற்களை அதாவது, கருத்தும் சொல்லும் இருமொழியிலும் காணப்படும் தன்மையுடைய சொற்களை மொழிபெயர்ப்பதில் சிக்கல்கள் தோன்றுவதில்லை. மொழி

பெயர்ப்பாளனுக்கு இருமொழிப் புலமை நிரம்பியிருந்தால் போதும். ஆனால் பண்பாட்டுச் சிறப்புடைய கருத்துகள் மற்றும் கலைச் சொற்களை மொழிபெயர்க்குமிடத்துச் சிக்கல்கள் தோன்றும். இது போன்ற சிக்கல்கள் இந்த மொழி பெயர்ப்பின் கண்ணும் தோன்றின.

அகம், புறம் என்னும் இலக்கியப் பாகுபாட்டுச் சொற்கள், கைக்கிளை முதலிய திணைப் பெயர்கள், முதுகாஞ்சி, மூதானந்தம் போன்ற துறைப் பெயர்கள், முதல், கரு, உரி என்னும் திணைப் புலப்பாட்டுச் சொற்கள், கலிப்பா, பரிபாடல் போன்ற யாப்பு வடிவங்களைக் குறிக்கும் சொற்கள் போன்றவற்றை நேரடியாக ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க இயலவில்லை. பொதுத்தன்மை இன்மையால் இத்தகைய பண்பாட்டுச் சொற்கள் (culture specific terms) ஒலிபெயர்க்கப்பட்டுள்ளன. இவ்வாறு ஒலிபெயர்த்துக் கூறப்பட்ட சொற்கள் கருதும் பொருள் ஆங்காங்கே அடிக்குறிப்பாக ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ளது. காட்டாகக், 'கைக்கிளை' என்னும் கவிதையியற் கருத்தீடு ஆங்கிலக் கவிதையியல் மரபில் காணப்படாமையின், அதனை மொழி பெயர்க்காமல் 'Kaikkilai' என்றே மொழிபெயர்ப்புப் பகுதியில் தந்து, அடிக்குறிப்பில் அது கருதும் இலக்கணப் பொருள் ஆங்கிலத்தில் விளக்கப்பட்டுள்ளது. பொருளதிகாரம் முழுவதும் மொழிபெயர்க்கப்பட்ட பின்னர் பின்னிணைப்பாக இடம்பெறும் கலைச்சொல் அகராதியில் இத்தகைய சொற்கள் எல்லாம் பொருள் விளக்கத்தோடு தமிழிலும், ஆங்கிலத்திலும் தரப்படும். மொழிபெயர்ப்பின் படிப்பினிமை (readability) சிதையலாகாது என்னும் காரணத்தால் இவ்விளக்கங்கள் நூலினுள்ளே தரப்படவில்லை.

புறத்திணை இயலில் ஆளப்பட்டுள்ள புறனே என்னும் சொல் ஒரு கோட்பாட்டைக் குறிக்கும் கலைச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது கருதும் பொருள் இன்னதென்று தெளிவாக விளங்கவில்லை என்பது மேலே விரிவாக ஆராயப்பட்டுள்ளது. எனவே இதனை மொழிபெயர்க்க இயலாத நிலை ஏற்பட்டது. முன்னைய மொழிபெயர்ப்பாளர்கள் இதனை ஒலி பெயர்த்துக் கூறியுள்ளனர். ஆனால் அடிக்குறிப்பாகவோ பிற வகையிலோ விளக்கம் தரவில்லை. இலக்குவனார் தமது விளக்கப்பகுதியில் 'counterpart' என்னும் சொல்லை இதற்கீடானதாகக் கருதித் தந்துள்ளார் (ப. 450). உரையாசிரியர்களின் விளக்கத்தை அடியொற்றி இவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டது போலும். இரு கூறுகளும் ஒரே தன்மையினவாய், ஒரே தொழிற்பாடு உடையனவாய் இருக்கும் நிலையில் அவை ஒன்றுக்கொன்று 'counterpart' என்று

கூறுவது ஆங்கில மரபு. அகத்திணைகளும் புறத்திணைகளும் இத் தன்மையினவல்ல என்பது மேலே விளக்கப்பட்டது.

அகம், புறம் என்பன தமிழ் இலக்கிய மரபு கண்ட மானுட வாழ்க்கையின் இன்றியமையாத கூறுகள்; ஒன்றையொன்று அவாவி நிற்பன; எனினும் தொழிற்பாட்டால் வேறுபட்ட தன்மையின. எனவே 'counterpart' என்பதைவிட 'இணையானவை' என்னும் பொருளுடைய parallel என்னும் மொழிபெயர்ப்பு பொருத்தமாகலாம் என்று கருதி, 'அகம் அல்லாத இணை' என்னும் கருத்தை உட்கொண்ட "non - akam parallel" என்னும் தொடர் புறனே என்னும் சொல்லுக்குரிய மொழிபெயர்ப்பாகத் தரப்பட்டுள்ளது. இதைவிடப் பொருத்தமான மொழிபெயர்ப்பு எதிர்காலத்தே தோன்றுமாயின, இதனை மாற்றிக் கொள்ளலாம் என்னும் எண்ணத்தில் தற்போது இவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இதுவரை இம் முன்னுரையில் கூறப்பட்டதிலிருந்து, இம் மொழிபெயர்ப்பில் எதிர்கொண்ட சிக்கல்களில் பெரும்பாலன மூல பாடப்பொருளை உணர்ந்து கொள்ளுதல் தொடர்பானவை என்பதும், மொழிபெயர்ப்புத் தொடர்பானவை சிலவே என்பதும் பெறப்பட்டன. இம் மொழிபெயர்ப்புப் பணி காலங் கண்ணிய கடமையாதலின் அவ்வெல்லைக்குள் கிடைத்த தரவுகள், ஆய்வுகள் மற்றும் அறிஞர் பலரது கருத்துகள் ஆகியவற்றின் துணை கொண்டு இயன்றாங்கு செய்யப்பெற்றுள்ளது. இதிற் காணும் கருத்துகளும், மொழிபெயர்ப்பும் முடிந்த முடிபுகள் அல்ல என்பது வெளிப்படை. இதனைப் படிக்க நேரும் அறிஞர் பெருமக்களின் திறனாய்வுக் கருத்துகளும், ஆலோசனைகளும் நன்றியுடன் வர வேற்கப்படுகின்றன.

நன்றியுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் வருகைதரு பேராசிரியர் என்னும் பணிநிலைகளைத் தோற்றுவித்துத் தமிழாராய்ச்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து வரும் நிறுவனத் தலைவரும், தமிழ் ஆட்சிமொழி மற்றும் பண்பாட்டுத்துறை அமைச்சருமாகிய மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கட்கும், அத்தகைய பேராசிரியருள் ஒருவராக என்னைத் தேர்வு செய்த உயர்நிலைக் குழு விற்கும் என் அன்பார்ந்த நன்றி உரியது.

வருகைதரு பேராசிரியராக நியமனம் பெற்ற பின்னர் எனக் குரிய ஆய்வுத் திட்டமாகத் தொல்காப்பியப் பொருளதிகார மொழி பெயர்ப்புப் பணியை அளித்து, அப்பணி செவ்வனே நிறைவேறத் தேவையான எல்லா உதவிகளையும் தயங்காமல் உடனுக்குடன் செய்து உதவிய நிறுவன இயக்குநர் முனைவர் ச.சு. இராமர் இளங்கோ அவர்கட்கும், இந்நிலையில் அவர்க்குத் துணைநின்ற அலுவலர் கட்கும், வேண்டியபோது நூல்கள் தந்துதவிய நிறுவன நூலக அலுவலர்கட்கும் மிகவும் நன்றியுடையேன்.

17. பிரிவுகள் பற்றியும் அவற்றிற்கு உரியோர் பற்றியும் கூறும் 28 முதல் 36 வரையிலான நூற்பாக்கள் பல்வேறு உரைகளைக் கொண்டுள்ளன. இந்நூற்பாக்கள் குறிக்கும் பொருளை விளக்குவதில் பண்டைய உரையாசிரியர்களுக்குள்ளும் இன்றைய திறனாய்வாளர்கட்கு இடையேயும் கருத்து வேறுபாடுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

33. uyarntōrk kuriya ōtti n̲ān̲ā

34. vēntuvin̲ai iyar̲kai vēntan̲ oṅiya.
ēn̲ōr maruṅkin̲um eytiṭan̲ uṭaittē.

The causes of separation ascribed to uyarntōr and the king may also apply to ēn̲ōr, mentioned in verse 26.

35. poruḷvayin̲ piritalum avarvayin̲ urittē.

Seperation on account of earning wealth (money) may also be appropriate to them.

36. uyarntōr poruḷ vayin̲ ol̲ukkat tān̲a.

When uyarntōr part from their lovers in order to earn money, they would do so in accordance with their avocations or calling.[18]

37. munnīr val̲akkam makaṭūuvōṭu illai.

There is no sanction of tradition for the hero to take his lady love or wife on a (sea) voyage.

38. ettiṇai maruṅkin̲um makaṭūu maṭan̲ mēl
por̲puṭai ner̲imai in̲mai yān̲a.

It does not become a lady love even to think of mounting a matal (palmyrrah horse) with a view to making public her love for a particular person, as it would tell up on the standards of feminine propriety.

18. The Cūtrās 28 through 36 which describe the various causes of separation and ascribe persons to the various kinds of separations have been interpreted in several ways. There is hardly agreement among either the old traditional commentators or the modern critics or commentators as to the correct meaning of these Cūtrās. Each one of them goes on his own.

39. தன்னும் அவனும் அவளும் சுட்டி
மன்னும் நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்
நன்மை தீமை அச்சம் சார்தல் என்று
அன்ன பிறவும் அவற்றொடு தொகைஇ
முன்னிய காலம் மூன்றுடன் விளக்கி
தோழி தேஎத்தும் கண்டோர் பாங்கினும்
போகிய திறத்து நற்றாய் புலம்பலும்
ஆகிய கிளவியும் அவ்வழி உரிய.[19]

தலைவன் தலைவியரது உடன்போக்கினை அறிந்த நற்றாய் தன்னையும், தலைவனையும், தலைவியையும், குறித்துப் புள் முதலாகிய நிமித்தமும், விரிச்சியும், வேலன் முதலிய தெய்வக்கூற்றும்; சுரத்திடத்து நிகழத் தக்க நன்மை, தீமை, அச்சம், சார்பு போல்வனவற்றைத் தொடர்புறுத்திக் கூறும் கூற்றும், இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் முக்காலத்தும் தலைவியின் நிலையை விளக்கித் தோழியிடமும், வழியிடைக் கண்டோரிடமும் இரங்கிப் புலம்பும் கூற்றும் (கூற்றிடங்கள்) நற்றாய்க்கு உரியனவாகும்.

40. ஏமப் பேரூர்ச் சேரியும் சுரத்தும்
தாமே செல்லும் தாயரும் உளரே.

பாதுகாவல் மிக்க பேரூர்ச் சேரியிலும் தலைவி உடன்போகிய வழியிலும் தமரின் துணையின்றித் தாமே சென்று தலைவியைத் தேடும் தாயரும் உளர். தாயர் எனவே நற்றாய், செவிலித்தாய் இருவருக்கும் இவ் ஒழுகலாறு பொருந்தும் என்பது கருத்து.

---

19. (அ) களவின்கண் உடன்போக்கு நிகழ்ந்தவிடத்து நற்றாய் புலம்புவதாகக் கவிதை புனைவதற்குரிய நிக்ழவுக் களன்கள் இவை என்று இந்நூற்பா தொகுத்து உரைக்கிறது.

(ஆ) முக்காலம் என்பதற்கு இருவகை வேனிலும் பின்பனியுமாகிய மூவகைப் பருவம் எனக் கொள்வர் பாலசுந்தரனார். இவ்வகையிலும் சான்றோர் செய்யுட்கள் காணப்படுகின்றன.

39. taṉṉum avaṉum avaḷum cuṭṭi
mannum nimittam moḻipporuḷ teyvam
naṉmai, tīmai accam cārtaleṉṟu
aṉṉa piṟavum avaṟṟoṭu tokaii
muṉṉiya kālam mūṉṟuṭan viḷakki
tōḻi tēettum kaṇṭōr paṅkiṉum
pōkiya tiṟattu naṟṟāy pulampaḷum
ākiya kiḷaviyum avvaḻi uriya.[20]

Naṟṟāy, the mother of the ladylove is to be portrayed as bewailing in the following manner when she comes to know about the elopment of her daughter with her lover; she would share her thoughts of anguish concerning herself and the lovers with her friend and with those who had seen the lovers on the way; describing the good and bad things that may befall the lovers; fear that might grip her daughter on the eerie way; the help that might be available to the pair, referring to the omens, predictions from unknown neutral persons and from possessed priests like Vēlaṉ; and narrating the events that happened in the past, happening now or that might occur in future or feeling sorry for the plight of the lovers on the desert like route in quite an inhospitable climate of hot summer and the later dewy season.

40. ēmap pērūrc cēriyum curattum
tāmē cellum tāyarum uḷarē.

There are mothers, natural and foster, who go by themselves to well guarded towns and townships or venture through desertlike lonely regions in search of the ladylove who eloped with her lover.

---

20. (a) This cūtra identifies the probable contexts in which the mother would be bewailing the elopement of her daughter. As such poets may compose any number of poems on these sub-themes which are generic in nature and generative in function.

(b) The phrase "kālam mūṉṟu" is interpreted as "three times" by most of the commentators and as "three seasons" by a modern commentator S. Balasundaram. There are poems in Cankam anthologies which answer both these intrepretations.

41. அயலோர் ஆயினும் அகற்சி மேற்றே

தலைவன்-தலைவியர் வேற்றூர்க்கும் சுரத்திடத்தும் செல்லாமல், ஓர் ஊரின் கண்ணேயே அயல்மனையில் தங்கியிருத்தலும் பாலைத் திணையின் உரிப் பொருளாகிய பிரிவாகவே கொள்ளப்படும்.

42. தலைவரும் விழும நிலையெடுத்து உரைப்பினும்
போக்கற் கண்ணும் விடுத்தற் கண்ணும்
நீக்கலின் வந்த தம்முறு விழுமமும்
வாய்மையும் பொய்ம்மையும் கண்டோற் சுட்டித்
தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக்
கொள்ளினும்
நோய்மிகப் பெருகித்தன் னெஞ்சுகலுழ்ந் தோளை
அழிந்தது களையென மொழிந்தது கூறி
வன்புறை நெருங்கி வந்ததன் திறத்தொடு
என்றிவை யெல்லாம் இயல்புற நாடின்
ஒன்றித் தோன்றும் தோழி மேன.

தலைவன் தலைவியை உடன் கொண்டு போகாதவிடத்துத் தலைவிக்கு நேரும் துன்பத்தை எடுத்துக் கூறுவதாகவும், தலைவி உடன் போக்குக்கு ஒருப்பட்டாள் எனக் கூறி அவனுடன் அனுப்புவதாகவும், தலைவன் உடன்போக்கு மேற்கொண்ட வழி தலைவியைப் பாதுகாக்குமாறு கூறுவதாகவும், தலைவி தமரை நீங்கிப் பிரிதலால் தமக்குற்ற துன்பத்தைக் கூறுவதாகவும், வாய்மையும் பொய்ம்மையும் காணப்பட்ட தலைமகனைச் சுட்டிப் பேசுவதாகவும், தலைவியைப் பிரிந்த தாயின் வருத்தம் நீங்க அவளைத் தேற்றுவதாகவும், பிரிவுத்துன்பம் பெருகி வருந்திய தலைவிக்குத் தலைவன் முன்பு கூறிய வன்புறைகளைக் கூறி நின் வருத்தத்தைத் தவிர்வாயாக என்று கூறுவதாகவும் மேலும் இத்தகைய இடங்களிலெல்லாம் தோழி பேசுவதாகவும் அமைவது இலக்கண மரபாகும்.

41. ayalōr āyiṉum akaṟci mēṟṟē.

Even if the lovers stay in elopement in a nearby house in the same village or town, it is considered as separation, the theme of pālaittiṇai.

42. talaivarum viḻuma nilaiyeṭuttu uraippiṉum
pōkkaṟ kaṇṇum viṭuttaṟ kaṇṇum
nīkkaliṉ vanta tammuṟu viḻumamum
vāymaiyum poymmaiyum kaṇṭōṟ cuṭṭit
tāynilai nōkkit talaippeyarttuk koḷḷiṉum
nōymikap perukit taṉṉeñcu kaḻulntōḷai
aḻinatatu kaḷaiyeṉa moḻinatatu kūṟi
vaṉpuṟai neruṅki vantataṉ tiṟattoṭu
eṉṟivai yellām iyalpuṟa nāṭiṉ
oṉṟit tōṉṟum tōḻi mēṉa.

The lady in league (tōḻi), the intimate friend of the heroine will speak in the following thematic contexts: to tell the hero of the plight of the heroine if he were not to elope with her; to request him to elope with her; to inform him that the ladylove had agreed to elope with him; to advise him to take good care of her during their elopement; to describe the sorrows of the household when the heroine leaves them; to make the hero realize the inconsistencies in his speech and conduct towards the heroine; to console the mother affected by the elopement of her daughter; to console the ladylove suffering from the pangs of separation by citing the promises and anecdotes of his constancy narrated by the lover earlier and in such other contexts related to this theme.

43. பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி
வழுவின் ஆகிய குற்றம் காட்டலும்
ஊரது சார்பும் செல்லும் தேயமும்
ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழியினும்
புணர்ந்தோர் பாங்கிற் புணர்ந்த நெஞ்சமொடு
அழிந்தெதிர் கூறி விடுப்பினும் ஆங்கத்
தாய்நிலை கண்டு தடுப்பினும் விடுப்பினும்
சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும்
கண்டோர் மொழிதல் கண்டது என்ப.

தலைவியும் தலைவனும் உடன்போக்கு செல்லும் காலம் மற்றும் வழியினது பொருத்தமின்மையையும் கடுமையையும் கூறித் தங்கிச் செல்வதற்கு அருகிலேயே ஓர் ஊர் உண்டென்றும் தாங்கள் செல்லக்கருதும் தேயம் மிகவும் சேய்மைத்தென்றும் அவர்கள்பால் அன்புகொண்டு கூறுவதாகவும்; இணைந்து செல்லும் காதலர்பால் அருள் உள்ளம் கொண்டு இனி இதற்கு மேலும் செல்ல வேண்டாம். இவ்வூரிலேயே இருங்கள் அல்லது மீண்டு செல்லுங்கள் என்று அறிவுறுத்துவதாகவும்; தலைவியைத் தேடிச் சுரத்தின்கண் சென்ற செவிலியை மேற்கொண்டு செல்லவேண்டாம் எனத் தடுத்து அறிவுறுத்துவதாகவும்; அவர்கள் சென்றவழி இதுதான் என்று கூறிச் செவிலியைப் போகவிட்டதாகவும்; அவர்கள் நெடுந்தொலைவு உடன்போக்கில் சென்றதாகவும்; மீண்டு வந்ததாகவும் கூறுதல் போன்றன கண்டோர்க்குரிய கூற்றுநிகழ் இடங்களாகப் புலனெறி வழக்கில் காணப்படுகின்றன என்று கூறுவர்.

44. ஒன்றாத் தமரினும் பருவத்தும் சுரத்தும்
ஒன்றிய மொழியொடு வலிப்பினும் விடுப்பினும்
இடைச்சுர மருங்கில் அவள்தமர் எய்திக்
கடைக் கெண்டு பெயர்தலின் கலங்கு அஞர் எய்திக்
கற்பொடு புணர்ந்த கௌவை உளப்பட
அப்பாற் பட்ட ஒரு திறத்தானும்,
நாளது சின்மையும் இளமையது அருமையும்
தாளாண் பக்கமும் தகுதியது அமைதியும்
இன்மையது இளிவும் உடைமையது உயர்ச்சியும்

43. po<u>l</u>utum ā<u>r</u>um uṭkuvarat tō<u>nr</u>i
va<u>l</u>uvi<u>n</u> <u>a</u>kiya ku<u>rr</u>am kaṭṭalum
ūratu cārpum cellum tēyamum
ārva neñcamoṭu ceppiya va<u>l</u>iyi<u>n</u>um
puṇarntōr pāṅki<u>r</u> puṇarnta neñcamoṭu
aḷintetir kū<u>r</u>i viṭuppi<u>n</u>um āṅkat
tāynilai kaṇṭu taṭuppi<u>n</u>um viṭuppi<u>n</u>um
cēynilaikku aka<u>nr</u>ōr celavi<u>n</u>um varavi<u>n</u>um
kaṇṭōr mo<u>l</u>ital kaṇṭat e<u>n</u>pa.

They (the grammarians) say that the literary tradition has witnessed the folloing thematic contexts in which kantor (those who meet the lovers on their way in elopement) speak; to discourage and advise out of compassion, the lovers in elopement to stay in the nearby place since their destination is far off, the sun is already set and their route is forbiddingly dangerous; to persuade them to give up their journey and stay in their village or return to their own; to forbid the foster mother who has set out in search of the pair from pursuing them further; to guide the foster mother by giving her the details of the route and mood of the lovers in elopement to describe the long journey taken by the pair in elopement; and to inform that the lovers have returned from the elopement.

44. o<u>nr</u>āt tamari<u>n</u>um paruvattum curattum
o<u>nr</u>iya mo<u>l</u>iyoṭu valippi<u>n</u>um viṭuppi<u>n</u>um
iṭaiccura maruṅkil avaḷtamar eytik
kaṭaikko<u>n</u>ṭu peyartali<u>n</u> kalaṅkuañar eytik
ka<u>r</u>poṭu puṇarnta kauvai uḷappaṭa
appā<u>r</u> paṭṭa oruti<u>r</u>at tā<u>n</u>um.
nāḷatu ci<u>n</u>maiyum iḷamaiyatu arumaiyum
tāḷāṇ pakkamum takutiyatu amaitiyum
i<u>n</u>maiyatu iḷivum uṭaimaiyatu uyarcciyum

(10) அன்பினது அகலமும் அகற்சியது அருமையும்
ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்,
வாயினும் கையினும் வகுத்த பக்கமோடு
ஊதியம் கருதிய ஒருதிறத் தானும்
புகழும் மானமும் எடுத்துவற் புறுத்தலும்.
தூது இடையிட்ட வகையி னானும்
ஆகித் தோன்றும் பாங்கோர் பாங்கினும்,
மூன்றன் பகுதியும் மண்டிலத்து அருமையும்
தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும்
பாசறைப் புலம்பலும், முடிந்த காலத்துப்
(20) பாகனொடு விரும்பிய வினைத்திற வகையினும்,
காவற் பாங்கின் ஆங்கோர் பக்கமும்,
பரத்தையின் அகற்சியின் பிரிந்தோட் குறுகி
இரத்தலும் தெளித்தலும் என இரு வகையோடு
உரைத்திற நாட்டம் கிழவோன் மேன.

தலைவியின் சுற்றம் வரைவு உடன்படாத போதும், தலைவியைச் சந்திப்பதற்குரிய பருவம் வாய்க்காதபோதும், செல்லுதற்குரிய கடுமையான சுரத்தின்வழிப் போகத்துணிந்து தக்க மொழியால் தலைவியை உடன்படுவித்து அவளுடன் உடன்போக்கு மேற்கொண்டவிடத்தும், ஆற்றியிருப்பாள் எனக் கருதித் தலைவியை உடன்கொண்டு பெயராது தான்மட்டும் தனியே செல்லுமிடத்தும், உடன்போக்கு செல்கின்ற வழியிடையே தன் சுற்றத்தார் வந்து தன்னை மீட்டுச் செல்வரோ எனக் கலங்கித் தலைவி கற்பொடு பொருந்திய ஒழுக்கத்தை வெளிப்படுத்துமிடத்தும் தலைவனுக்குக் கூற்று நிகழும்.

மானுடவாழ்க்கை நிலையற்றது என்பதையும், இன்பத்திற்குரிய இளமை விரைவில் கழிவது, மீண்டும் பெறல் அரிது என்பதையும், பொருள் தேடல் பெரும் முயற்சியையும் இடர்ப்பாடுகளையும் உடையது என்பதையும், பொருள்மேல் பற்று உயர்ந்தோர்க்குத் தகாது என்பதையும், வறுமையால் விளையும் இகழ்ச்சி காரணமாகத் தோன்றும் கீழ்மையுணர்வையும், பொருள் உடையார்க்கு மேன்மேலும் அதன்மேல் பற்று செல்லுதல் தகாது என்பதையும், தனக்குச் சிறந்தார் (தலைவி) மாட்டு அன்பு எப்போதும் உடனிருத்தலை வேண்டுவது என்பதையும், தலைவியைப் பிரிந்திருப்பது மிகவும் துன்பமானது என்பதையும் ஆகிய இந்த எட்டினையும் - பொருட்படுத்தாமல்

aṉpiṉatu akalamum akaṟciyatu arumaiyum
oṉṟāp poruḷvayiṉ ūkkiya pāliṉum,
vāyinum kaiyiṉum vakutta pakkamōṭu
ūtiyam karutiya orutiṟat tāṉum
pukaḻum māṉamum eṭuttuvaṟ puṟuttalum
tūtu iṭaiyiṭṭa vakaiyi ṉāṉum,
ākit tōṉṟum pāṅkōr pāṅkinum,
mūṉṟaṉ pakutiyum maṇṭilattu arumaiyum
tōṉṟal cāṉṟa māṟṟōr mēṉmaiyum
pācaṟaip pulampalum, muṭinta kālattup
pākaṉoṭu virumpiya viṉaittiṟa vakaiyiṉum
kāvaṟ pāṅkiṉ āṅkōr pakkamum.
parattaiyiṉ, akaṟciyiṉ pirintōṭ kuṟuki
irattalum teḷittalum eṉa iru vakaiyōṭu
uraittiṟa nāṭṭam kiḻavōṉ mēṉa.

The hero (lover) will speak on the following occasions:

When the parents of the heroine (ladylove) would not agree to his marriage with her, when there were no more chances of meeting her; when he decides to elope with her to a distant place along the desert like arid and eerie tract; when he leaves alone without taking the heroine with him; when the ladylove resolves to go with him expressing her sentiment of chasity, when she is scared that her relatives may threaten, during their elopement, to take her back home forcefully.

When he resolves to part from his ladylove in order to earn money and actually when he leaves in pursuit of wealth ignoring the following aspects of life, love and wealth; the span of life is very short; youth is evanescent and irretrievable; pursuit of wealth entails a lot of difficulties and dangers; desire for wealth not desirable; despondency issuing from a sense of misery caused by poverty; it is unbecoming for the rich to be avaricious; depth of love does not brook separation; separation from one's ladylove is unbearable.

புறக்கணித்துப் பொருள் தேடச் செல்ல நினைக்கும் போதும், செல்லும் போதும் தலைவனுக்குக் கூற்று நிகழும்.

மொழிவழி கற்கும் நூற் பயிற்சியின் பொருட்டும், கைவழி கற்கும் சிற்பம், படைக்கலப் பயிற்சி போன்றவற்றிற்காகவும் பிரியும் ஓதற் பிரிவினிடத்தும், இவற்றிற்காகப் பிரிந்து செல்லுதலால் விளையும் புகழையும், இவற்றின்மேற் செல்லாதவிடத்துத் தனக்கு உண்டாகும் குற்றத்தையும் தலைவிக்கும் தோழிக்கும் விளக்கிக் கூறுமிடத்தும் தலைவனுக்குக் கூற்று நிகழும்.

இருபெரு வேந்தர்க்கிடையே சந்து செய்வதற்காகத் தூதாகிச் செல்லும் போதும், தனக்கு நட்பாயினாருக்குத் துணையாகிச் செல்லும் நிலையிலும், தன்வலி, துணைவலி, வினைவலி என்னும் மூன்றுவகை[21] வலிமையாலும், எளிதிற் பற்ற இயலாத அரண்களை உடையது தம் நாடு என்னும் கருத்தானும் செருக்கு மீதூர்ந்து நிற்கும் பகைவர் மேல் செல்லுமிடத்தும் தலைவனுக்குக் கூற்று நிகழும். மேற்கூறிய காரணங்களுக்காக, அதாவது, தூதின் மேற் செல்லும்போதும், துணையாயினார்க்காகப் பிரியும்போதும், தன்பகைமேற் செல்லும் போதும் பாசறையின்கண் தங்க நேருங்கால் தனிமையில் புலம்புமிடத்தும் தலைவனுக்குக் கூற்று நிகழும் என்பதாகும்.

தான் மேற்கொண்ட வினை முடிவுற்ற பின்னர்த் தன்வினைத் திறத்தை விளக்கிப் பாசறையிலும், மீண்டு செல்லும் வழியிலும் பாகனொடும், ஒரோவழித் தன் நெஞ்சினொடும் தலைவன் பேசுவதாகக் கூற்றுகள் நிகழும். பல்வேறு வகையான காவலுக்காகப் பிரியுமிடத்தும், பரத்தையின்பால் பிரிந்துசென்ற தலைவன் தலைவியிடம் திரும்பி வந்து தன் குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளுமாறு வேண்டுமிடத்தும் தலைவியைத் தெளிவிக்குமிடத்தும் ஆகிய மேற்சுட்டிய இடங்களிலெல்லாம் தலைமகனுக்குக் கூற்றுகள் நிகழும்.

---

21. "மூன்றன் பகுதி" என்னும் தொடருக்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர், ச.சோ. பாரதியார் ஆகிய மூவரும் மூவகையாகப் பொருள் கொள்கின்றனர். இளம்பூரணரை அடியொற்றி மேலே கண்ட உரை தரப்பட்டுள்ளது.

When the hero intends to go on studies and to equip himself with proper training in fine arts and martial arts; when he dilates to the heroine upon the benefits of such education and training and upon the drawback of not acquiring them in the fullness of time.

When he goes on duty as an ambassador; when he goes on an expedition in support of his friends, when he goes on against his enemies who pride over their own strength, that of their allies and over the high degree of viability of the tast ahead,[22] and over the inaccessibility of their forts and castles; when he feels lonely in the war camp on account of his separation from his wife during such occasions.

When, after accomplishing his mission, he explains about it to his charioteer in his warcamp or on his way back and when he asks him to go faster, when he sets out on duties regarding maintaining law and order in the country or regarding the supervision of temples and other places of worship.

When, on his return from his stay with the prostitutes, he seeks pardon of his wife and pacifies her finally.

These are all the occasions on which the hero is portrayed as speaking with others or to himself at times.

---

22. the phrase "munran pakuti" in line 17 is severally interpreted by the commentators from Ilampuranar through S.S. Bharatiyar. The interpretation given above is based upon that of Ilampuranar.

45. எஞ்சி யோர்க்கும் எஞ்சுதல் இலவே.

இதுவரை கூறப்பட்ட நற்றாய், கண்டோர், தோழி தலைவன் ஆகியோரைத் தவிரத் தலைமகள், பாங்கன், செவிலி, பார்ப்பார், பாணர், கூத்தர் முதலியோரும் கூற்றுகள் நிகழ்த்துதற்கு உரியர்.[23]

46. நிகழ்ந்தது நினைத்தற்கு ஏதுவும் ஆகும்.

முன்னர் நடந்த நிகழ்ச்சி ஒன்றைப் பின்னர் நினைவுக்குக் கொண்டுவந்து சிந்திப்பதாகவும் தலைவனுக்குக் கூற்று நிகழ்தல் உண்டு. இத்தகைய கூற்று பிரிவு பற்றியதாக அமையும்.

47. நிகழ்ந்தது கூறி நிலையலும் திணையே.

முன்பு நடந்த நிகழ்ச்சி ஒன்றைப் பின்னர் எடுத்துக் கூறிப் பிரிவு மேற்கொள்ளாமல் தலைவன் தவிர்த்தலும் பாலைத் திணைக்குரியதாகும்.

48. மரபுநிலை திரியா மாட்சிய ஆகி
விரவும் பொருளும் விரவும் என்ப.

அகத்திணை இலக்கிய மரபிலிருந்து மாறுபடாத தன்மையுடைய்னவாய் வந்து விரவத் தக்கனவும் அக மாந்தர் கூற்றாக விரவி வரும் என்பர்.

49. உள்ளுறை உவமம் ஏனை உவமமெனத்
தள்ளாதாகும் திணையுணர் வகையே.

உள்ளுறை உவமம், வெளிப்படை உவமம் ஆகிய இரண்டும் தப்பாமல் திணையுணர்தற்குரிய கருவிகளாகும்.

---

23. தலைவி கூற்று பற்றிய நூற்பா காலந்தோறும் ஏடு பெயர்த்து எழுதுவோரால் விடப்பட்டிருக்கலாம் என்ற இளம்பூரணர் கூற்று சிந்தித்தற்குரியது. இவ்வியலின் முதல் அடிக்குறிப்பைக் காண்க.

45. eñci yōrkkum eñcutal ilavē.

Akram characters, other than those mentioned above, like the ladylove, foster-mother, male companion, bards etc., are also eligible to speak in appropriate contexts.[24]

46. nikaḻntatu niṉaittaṟku ētuvum ākum

An earlier incident may be later recalled and this may cause an occasion for speech by the hero.

47. nikaḻntatu kūṟi nilaiyalum tiṇaiyē.

Mentioning an earlier occasion and giving up the idea of parting from his ladylove also belong to pālaittiṇai.

48. marapunilai tiriyā māṭciya āki
viravum poruḷum viravum eṉpa.

They say that certain other things may also get included as occasions or contexts of speaking by the Akam characters provided such things do not contravene the Akam literary tradition.

49. uḷḷuṟai uvamam ēṉai uvamamēṉat
taḷḷā tākum tiṇaiyuṇar vakaiyē.

Two kinds of simile namely, the suggestive and the clear are definite means of identifying the tiṇai or the aspects of love dealt with in a poem.

24. The absence of a separate cutra for the ladylove is explained by Ilampuranar as caused by the negligence of the scribes who copied the age old manuscripts through the centuries. Coming from the first commentator this note is very significant. See the second footnote at the head of this chapter.

50. உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலம் எனக்
கொள்ளும் என்ப குறிஅறிந் தோரே.

கருப்பொருள்களுள் தெய்வம் நீங்கலாக ஏனையவற்றை நிலைக்களனாகக் கொண்டு உள்ளுறை உவமம் வரும் என்பர் இலக்கணம் அறிந்தோர்.

51. உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள் முடிகென
உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம்.

தான் புலப்படுத்தக் கருதிய பொருளைக் கூறப்பட்ட உவமப் பொருளோடு சார்த்தி உணருமாறு உள்ளுறுத்திக் கூறுவதே உள்ளுறை உவமமாகும்.

52. ஏனை உவமம் தானுணர் வகைத்தே.

வெளிப்படை உவமம், உய்த்துணர வேண்டிய அவசியமின்றி, உவமம் இது, பொருள் இது எனத் தெளிவாகத் தானே உணர்த்தும் தன்மையது.

53. காமம் சாலா இளமை யோள்வயின்
ஏமம் சாலா இடும்பை எய்தி
நன்மையும் தீமையும் என்றுஇரு திறத்தான்
தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே.

காமம் நிரம்பாத இளையவளிடத்து அவளையன்றி வேறு மருந்தில்லாத காம நோய்வயப்பட்டுத் தன்னைப் புகழ்ந்தும், தனக்கு அருளாமையால் அவளையும் அவளது தமரையும் பழித்தும் அவளொடு சொல்லாடி எதிர் மாற்றம் பெறாதவனாய்த் தனக்குத் தானே சொல்லி இன்புறும் ஒழுக்கம் கைக்கிளையின்பாற் படும்.[25]

---

25. இனி, 'நன்மையும் தீமையும்', என்பதற்கு, 'அவளைப் புணர்வதனால் தனக்கு விளையும் மகிழ்ச்சியையும், புணராவழி அவளால் தனக்கு உண்டாகும் வருத்தத்தையும் எடுத்துக்கூறி" எனப் பொருள் கொள்ளலும் உண்டு.

கைக்கிளையாவது ஒருபாற் கேண்மை, இது தலைவன்மாட்டு மட்டுமே பொருந்தித் தோன்றும். தலைவிமாட்டுக் கைக்கிளைக் குறிப்பு தோன்றுவதாகக் கூறும் அக இலக்கிய மரபு தமிழில் இல்லை.

50. uḷḷuṟai teyvam o̱lintatai nilameṉak
koḷḷum eṉpa kuṟiaṟin tōrē

Both the vehicle and the tenor of the suggestive simile shall be drawn on any of the karupporuḷ except the deities listed above in cūtra twenty.

51. uḷḷuṟuttu itaṉōṭu ottupporuḷ muṭikeṉa
uḷḷuṟttu uraippatē uḷḷuṟai uvamam.

The suggestive simile is that which is structured in such a way as to enable the reader to infer the intended meaning from the described simile.

52. ēṉai uvamam tāṉuṇar vakaittē.

The clear simile is that wherein the vehicle obviously refers to the tenor, without entailing any inference.

53. kāmam cālā iḷamai yōḷvayiṉ
ēmam cālā ītumpai eyti
naṉmaiyum tīmaiyum eṉṟuiru tiṟattāṉ
taṉṉoṭum avaḷoṭum tarukkiya puṇarttuc
coletir peṟāṉ colli iṉpuṟal
pullit tōṉṟum kaikkiḷaik kuṟippē.

Kaikkiḷait tinai, the first division of Akam poetry has the following aspects: the hero approaches a girl who is not emotionally mature enough to respond to his inflicting and incurable passion of love; tries to build up a conversation with her describing his distress, and her indifference but does not get any response yet indulges himself in such a talk.[26]

26. Such an aspect of love is called kaikkilai, which may be termed as unreciprocated love or love unrequited. Only the hero is portrayed as indulging in such an aspect of love. There is no literary convention in Tamil Akam tradition portraying a lady as indulging in kaikkiḷai aspect of love.

54. ஏறிய மடல்திறம் இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇ
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே.

மடலூர்வேன் என்று கூறுமளவில் நில்லாமல் மடலேறும் பாங்கும், இளமை நீங்கிய அகவை நிலையும், தெளியமாட்டாத அளவிற்குக் காமம் முதிர்ந்த பாங்கும், கரைகடந்த காமத்தால் தன்னொடு மேவோம் என்பாரையும் வலிதிற் புல்லும் பாங்கும் ஆகிய நான்கும் பெருந்திணைக்குரிய பண்புகளாகும்.[27]

55. முன்னைய நான்கும் முன்னதற் கென்ப.[29]

முன்னர்க் கூறப்பட்ட நான்கும் முன்னதற்குரிய என்று கூறுவர்.

---

27. (அ) இவற்றுள் மடலூர்தலும், வலிதிற் புல்லுதலும் தலைமகனுக்கே உரியவை. இளமை தீர்திறமும், தேறுதல் ஒழிந்த காமமும் இருபாலார்க்கும் உரியவை. மகளிர் மடலேறும் மரபு தமிழில் இல்லை. ஆடவர் மடலேறுதலும் அருகிய வழக்கே.

(ஆ) தமர் வரைவு உடன்படாதபோது, பனங்கருக்காற் செய்த குதிரையின் மீது ஏறி நாற்சந்தியில் நின்று தன் களவுக் காதலை எல்லோர்க்கும் புலப்படுத்தி வரைவுக்குத் தமரை உடன்படச் செய்ய மேற்கொள்ளும் முயற்சியை மடலேறுதல் என்பர்.

29. நேரடியாகப் பொருள் காண முடியாத நூற்பாக்களுள் இதுவும் ஒன்று.

பெருந்திணைக் குறிப்புகளாகக் கூறப்பட்ட நான்கிற்கும் முற்பட்ட நிலைமைகளாகிய ஏறாமடல்திறம், இளமை தீராத்திறம், தேறுதல் ஒழிந்த காமத்து மிகாத்திறம், மிக்க காமத்தின் மாறாகாத் திறம் என்ற நான்கும் முற்கூறப்பட்ட கைக்கிளைக்கு உரியனவாம் என்ப என்று இளம்பூரணர் இந்நூற்பாவிற்குப் பொருள் காண்கிறார். இயற்கைப் புணர்ச்சிக்கு முன் நிகழ்ந்த காட்சி, ஐயம், தெரிதல், தேறல் ஆகிய நான்கும் முற்கூறிய கைக்கிளையாவதற்கு உரிய என்று கூறுவர் ஆசிரியர் என்று நச்சினார்க்கினியர் உரை காண்கிறார். கைக்கிளை, பெருந்திணை பற்றிய நூற்பாக்களுக்கு முன்னால் கூறப்பட்ட நிகழ்ந்தது நினைத்தல், நிகழ்ந்தது கூறி நிலையல், மரபுநிலை திரியாது விரவும் பொருள் விரவல், உள்ளுறை உவமம் திணையுணர் வகையாதல் என்ற நான்கும் கைக்கிளை, பெருந்திணை இரண்டனுள் முற்கூறிய கைக்கிளைக்காகும் என்று கூறுவர் புலவர் என்று ச.சோ. பாரதியார் உரை காண்கிறார். இவற்றுள் இளம்பூரணர் உரை செம்மையானது என இக்காலக் காண்டிகையுரையாசிரியர் பாலசுந்தரனாரும், நச்சினார்க்கினியர் உரை பொருத்தமானது எனத் தொல்காப்பிய உரைவள ஆசிரியர் சிவலிங்கனாரும் கருதுகின்றனர். மூன்றாவது உரை பொருத்தமற்றது என்பது பாலசுந்தரனார் கருத்து.

54. ēṟiya maṭaltiṟam iḷamai tīrtiṟam
tēṟutal oḻinta kāmattu mikutiṟam
mikka kāmattu miṭaloṭu tokaii
ceppiya nāṉkum peruntiṇaik kuṟippē.

The following four are the aspects of Peruntinai, the seventh division of Akam poetry: the act of mounting the horse made of palmstems; being in a state of past youth; being head over heels in lust beyond control; and forcefully taking a nonchalant lady owing to his overflowing passion.[28]

55. muṉṉaiya nāṉkum muṉṉataṟ keṉpa.[30]

They say that the former four belong to the former.

28. (a) Of the four, the aspects of mounting the palmyrahorse and that of forcefully taking a lady are ascribed only to the hero. The other two are common to both the lovers. Tamil tradition does not depict a lady in love as mounting the palm horse. In the case of the hero too, it is rarely resorted to.

(b) When the parents of the ladylove refuse to give her in marriage, the hero resorts to mounting the palmhorse to declare his premarital clandestine love to the public with a view to forcing them to agree to their marriage.

30. This is one of the cūtras which tease us out of thought. Iḷampūraṇar is of the opinion that the stage preceding the four aspects of peruntiṇai belong to kaikkiḷai. Nacciṉārkkiṉiyar holds that the four stages preceding the first union of the lovers belong to kaikkiḷai. S.S. Bharatiyār, the modern commentator refutes both the above interpretations and holds that the four cutras preceding those on kaikkiḷai and peruntiṇai belong to kaikkiḷai. The recent commentator Balasundaram agrees with Iḷampūraṉār while the variorum editor Sivalinganar with Nacciṉārkkiṉiyar. The objections raised by Bharatiyār to the Interpretations of Iḷampūraṇar and Nacciṉārkkiṉiyar hold good. His interpretation seems however irrelevant and far fetched besides the fact that there are six cūtras which precede those on kaikkiḷai and peruntiṇai, not four as he takes them to be. Thus this cūtra remains inscrutable if not enigmatic as it defies our attempts to arrive at in indisputable intrepretation.

56. நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்
உரிய தாகும் என்மனார் புலவர்.

புனைந்துரையும் உலகியல் வழக்கும்[31] கொண்டு இயற்றப்பெறும் அகப்பொருள் இலக்கியம் கலிப்பா, பரிபாட்டு ஆகிய இரண்டு பாவகைகளுக்கும் உரியதாகும் என்று கூறுவர் இலக்கணப் புலவர்.

57. மக்கள் நுதலிய அகன்ஐந் திணையும்
சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்.

முல்லை முதலாகிய ஐந்திணைக்கும் உரிய திணைநிலை மக்களை அகமாந்தர்களாகக் கொண்டு புலனெறி வழக்கம் செய்யுமிடத்து, அவ்வத் திணைசார்ந்த நிலப்பெயரானல்லது இயற்பெயரால் ஒருவரும் (தலைவன் முதலானவர்களுள் யாரும்) சுட்டி வழங்கப்படார்.

இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகியோர் உரைகளைப் பற்றிப் பாரதியார் எழுப்பும் தடைகள் பொருத்தமானவையாகத் தோன்றுகின்றன. எனினும் பாரதியார் கூறும் உரை பொருத்தமானதாகவோ தேவையானதாகவோ தோன்றவில்லை. அவர் கூற்றுப்படி நோக்கினும், கைக்கிளை, பெருந்திணைகளுக்கு முன்னால் ஆறு நூற்பாக்கள் உள்ளன. அவற்றுள் நான்கினை மட்டும் விதந்து கொள்ள வேண்டிய காரணம் விளங்கவில்லை. எனவே ஐயத்திற்கிடமற்ற உரைகாணக் கூடியதாக இந்த நூற்பா அமையவில்லை.

31. (அ) நேருக்கு நேர் பேசுவது நாடகவழக்கு; ஒருவர் ஒருவரிடம் கூறுவதாக அமைவது உலகியல் வழக்கு; இந்த இருவகைகளையும் உடையதாக அமையும் அகப்பொருள் இலக்கியம் கலிப்பா, பரிபாடல் என்னும் இருவகைப் பாக்களிலும் பாடுவதற்கு உரியதாகும் என்று இந்நூற்பாவிற்குப் பொருள் காண்பர் சிவலிங்கனார்.

(ஆ) பாடுபொருள், பாடல்வடிவம், என்னும் இரு கூறுகளுள் முன்னதை முன்னிரு அடிகளும் பின்னதைப் பின்னிரு அடிகளும் உணர்த்துவதாக இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் கொள்ள, நான்கு அடிகளும் பாடல் வடிவத்தையே கூறுவதாகச் சிவலிங்கனார் கொள்ளுகிறார்.

56. nāṭaka va l̲akki n̲um ulakiyal va l̲akki n̲um
pāṭal cā n̲r̲ a pula n̲e r̲ i va l̲akkam
kiliyē paripāṭṭu āyiru pāvi n̲um
uriya tākum e n̲ma n̲ār pulavar.

Akam poetry which draws its sustenance from fiction and reality[32] has kalippā and paripāṭal as its appropriate metres, as per the authorities on grammar (poetics).

57. makkaḷ nutaliya aka n̲ain tiṇaiyum
cuṭṭi oruvarp peyarkoḷap pe r̲ āar.

As a convention of Akam poetry, none of the human characters belonging to any of the five tinais from mullai through neytal, would be mentioned by his or her proper name.

---

32. (a) Sivalinganar takes "nāṭaka va l̲akku" to mean "dramatic dialogue" and "ulakiyal va l̲akku" to mean "narrative mode" and interprets that kalippā and paripātal which are suitable for dialogue and narration together, are the appropriate metres for Akam poetry.

(b) Both I l̲ampūraṇar and Nacci n̲ārkki n̲iyar take the first two lines of the verse to refer to the subject matter of Akam poetry and the last two lines to the metrical forms thereof, while Sivalinganar takes the whole verse to refer to the mertircal forms of Akam poetry.

**58. புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது
அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே.**

ஒருவரை இயற்பெயர் சுட்டி வழங்குதல் புறத்திணைப் பகுதியில் பொருந்தி வருமே தவிர, அகத்திணைப் பகுதியில் பொருந்தி வருதல் இல்லை.[33]

---

33. அதாவது இயற்பெயரால் ஒருவரைச் சுட்டும் மரபு கைக்கிளை, பெருந்திணை உள்ளிட்ட அகப்பொருள் வழக்காற்றில் இல்லை; அகப்பொருள் இலக்கியம் ஒருவரைச் சாராது மானுடப் பொதுமையாக வரும் என்பது கருத்து. புறத்திணையுள்ளும் காமம் பொருளாக வரும் பாடாண்பாட்டின்கண் மட்டுமே ஒருவரது இயற் பெயர் சுட்டப்பெறும் மரபு உண்டு. மற்ற இடங்களில் குடிப்பெயரால் வழங்குதலேயன்றி இயற் பெயர் சுட்டும் மரபு அங்கும் இல்லை.

58. Pu̱rattiṇai maruṅkin poruntin̲ allatu
akattiṇai maruṅkin̲ a̲lavutal ilavē.

Use of proper names would be appropriate in Pu̱rattiṇai but not so in Akattiṇai.[34]

---

34. This cūtra modifies the purport of the earlier cūtra, apart from laying down the norm for pu̱rattiṇai. As such, it stands to mean that proper names are not to be used even in kaikkiḷai and peruntiṇai. Even in purattiṇai proper names are used only in themes like Pāṭāṇtin̲ai. Elsewhere only clanish names are used and not proper names.

புறத்திணை இயல்[1]

59. அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்
புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்
வெட்சி தானே குறிஞ்சியது புறனே
உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே.[3]

அகப்பொருள் இலக்கியம் பற்றிய முறைமைகளைக் குற்றமற உணர்ந்தவர்கள் புறப்பொருள் இலக்கியம் குறித்த இலக்கணக் கூறுகளைப் பாகுபடுத்திக் கூற முற்படின், அகப்பொருள் சார்ந்த குறிஞ்சித் திணைக்குப் புறனாய வெட்சித்திணை அச்சமுறச் செய்யும் பதினான்கு துறைகளை உடையது என்று கூறுவர்.[5]

---

1. ஒருவன்-ஒருத்தி என்னும் அகவொழுக்கத்திலிருந்து வேறுபட்ட மானுட ஒழுகலாறுகளை இலக்கியப்படுத்தும் முறைமைகளைக் கூறும் இலக்கணப்பகுதி புறத்திணை இயல் எனப் பெயர்பெற்றது. தலைவன் தலைவியரது இன்ப ஒழுக்கம் தவிர்ந்த ஏனைய(வீடு, சமுதாயம், நாடு எனப் பாகுபடும்) எல்லா மானுட ஒழுகலாறுகளும் புறம் எனக்கொண்டு இலக்கியம் படைப்பது பண்டைத் தமிழர்தம் பொருளிலக்கண மரபாகும்.

3. புறத்திணையியலின் தலைச் சூத்திரமாக அமைந்துள்ள இந்த நூற்பாவும் சிதைவுக்கு உட்பட்டதோ என்று கருதத் தோன்றுகிறது. களவு கற்பு, மெய்ப்பாடு, உவமை பற்றிய இயல்களின் தலைச்சூத்திரங்களை நோக்க. இந்த இயலின் தலைச்சூத்திரமும் புறத்திணை என்றால் இன்னது என்று வரையறுத்துக் கூறவேண்டும். அகத்திணையியலின் தலைச்சூத்திரமும் இத்தகைய வரையறையைக் கூறவில்லை என்பது முன்னரே கூறப்பட்டது. மேலும் அகத்திணையியலின் முதற் சூத்திரமாவது அகத்திணை ஏழு வகைப்படும் என்று கூறுகிறது. இச்சூத்திரம் அவ்வாறு திணைப்பாகுபாட்டையும் கூறவில்லை. இந்த இயலின் முதற்சூத்திரம் சிதைந்த நிலையில் அடுத்த சூத்திரத்தோடு சேர்த்து ஒரே சூத்திரமாக ஏடெழுதுவோரால் பெயர்த்தெழுதப்பட்டதோ என்னும் ஐயம் எழுகிறது. "எஞ்சியோர்க்கும் எஞ்சுதல் இலவே" என்னும் அகத்திணையியல் சூத்திர விளக்கஉரையில் இளம்பூரணர் குறிப்பிடும் ஐயத்தை நோக்க இக்கருத்து வலுப்பெறுகிறது. பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரியார் தம்முடைய பொருளதிகார ஆங்கில மொழிபெயர்ப்பில் முன்னரே இதனைச் சுட்டியுள்ளதும் சிந்திக்கத்தக்கது.

5. (அ) "அரில்தப உணர்ந்தோர் . . . கிளப்பின்" என்று முடிக்காமல், "உணர்ந்தோர் (கூறிய) புறத்திணை இலக்கணத்தைக் கூறின் என்று இயைத்துப் பொருள் கொள்வர் நச்சினார்க்கினியர்.

(ஆ) இந் நூற்பாவில் இடம்பெறும் புறனே என்னும் சொல்லுக்கு உரையாசிரியர் அனைவரும் "புறம்" என்றே பொருள் கூறுகின்றனர். "புறம்" என்னும் சொல்லை எந்தப் பொருளில் இவர்கள் வழங்குகின்றனர் என்று அறிய இயலவில்லை. வெளிப்படைச் சொல்லெனக் கருதுவார் போலும். அகத்திணைகளும் புறத்திணைகளும் ஒன்றுக்கொன்று எவ்வாறு புறனாகின்றன என்பதை

PURATTINAI IYAL[2]

59. akkattiṇai maruṅkin ariltapa uṇarntōr
puṟattiṇai ilakkaṇam tiṟppaṭak kiḷappiṉ
veṭci tāṉē kuṟiñciyatu puṟaṉē
uṭkuvarat tōṉṟum īrēḻ tuṟaittē[4]

When experts in the poetics of Akam poetry deal with that of Puṟam poetry (they hold) that veṭci is the non-Akam parallel to kuṟiñci and that it has fourteen aspects of subthemes of frightful nature.[6]

---

2. According to ancient Tamil poetics, Akam poetry deals with the physical union of the lovers, together with the aspects which contribute to or result from such a union. It is not concerned with their other activities whether domestic, social or professional all of which are dealt with in Puṟam poetry. Aesthetically speaking, Akam deals with an idealised form of love, while Puṟam deals with all the other aspects and emotions which inform the human life.

4. This cūtra also bristles with the problem of questionable authenticity. With reference to the first cutras of kaḷaviyal. karpiyal, meyppāṭṭiyal, uvamaviyal and ceyyuḷiyal, one would expect that the first cutra of this chapter also defines its theme and enumerates the divisions there of. But it does neither. In all probability, the portion of the first cutra from the third line onwards might have been illegible and corrupt beyond correction or conjecture and the scribe would have telescoped the next cutra into the damaged portion and come with an improvised one in the present form. P.S.Sastri, the earliest known translator of Tolkāppiyam has already drawn our attention to this inference and Iḷampuranar, the first commentator on Tolkāppiyam has also drawn our attention to such a scribal error, in his commentary on the cutra, "enciyōrkkum eñcutal ilave".

6. (a) Nacciṉārkkiṉiyar brings in "Tolkāppiyar in first person" as the subject of the verb. 'kilappin' and glosses, "if we classify the grammar of Puṟattiṇai as described by the experts of Akattiṇai....", to get over the maze caused by the existing corrupt form of this cutra.

b) The term Puṟaṉē in this cutra defies an exact translation into English. Neither the commentators provide a gloss on this word nor the translators have translated this word. S. Illakkuvanar's use of the term, "counterpart" does not solve the issue, either. The commentators vie with each other to show how both the

விளக்குமிடத்து எல்லா உரையாசிரியர்களும் முதல், கரு, உரிப்பொருள்களால் அவை எவ்வாறு ஒத்த தன்மையினவாய் உள்ளன என்று எடுத்துக்காட்டுவதில் ஆர்வம் செலுத்துகின்றனர். ஆயின் இவ்வளவு ஒற்றுமை உடைய இவை எவ்வாறு ஒன்றுக்கொன்று புறனாகின்றன என்னும் வினாவிற்கு உரைகளில் விடை காண இயலவில்லை.

அகப்பொருளை ஏழு திணைகளாக வகுத்துக் கொண்ட மரபுக்கேற்ப அவற்றிற்கு இணையாகப் புறப்பொருளையும் ஏழு திணைகளாகத் தொல்காப்பியர் வகுத்துக் கொண்டார் என்பது, "அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர். புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்" எனவரும் புறத்திணை இயலின் தலைச் சூத்திரத்தால் விளங்குகிறது. வெட்சி முதலாயின புறத்திணைகள் என்பதும் வெள்ளிடை மலை. எனினும் வெட்சி முதலாயின குறிஞ்சி முதலாயினவற்றிற்கு ஒவ்வொன்றும் முறையே புறனாவது எவ்வாறு என்பதைத் தொல்காப்பியர் எங்கும் வெளிப்படையாகக் கூறவில்லை.

எனவே புறனே என்னும் சொல்லால் தொல்காப்பியர் தம் கவிதையியலின் எந்த அமைப்பை அல்லது கூறைச் சுட்டுகிறார் என்பது விளங்கவில்லை.

Akam and Puṟam tiṇais parallel closely in terms of Mutal, karu and *uripporul*. Hence the present translator has chosen to translate the term tentatively as "non-Akam parallel", eventhough "anithesis" is also a probable equivalent of *Puṟaṉ* in view of the fact that the themes of the respective *tiṇais* are contrastive, besides the form and techniques.

What the author of *Tolkāppiyam* means by yoking together the aspects of *Akam* and *Puṟam* through such contrast and comparison is, however, beyond our grasp at the present state of our knowledge.

60. வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
ஆதந்து ஓம்பல் மேவற்று ஆகும்.

அரசனது ஆணையால் ஏவப்பெற்ற எல்லைப்புறப் பாசறை வீரர்கள் பகைவர் நாட்டினுள் நுழைந்து அவர்தம் ஆநிரைகளைக் களவாடித் தம் நாட்டுக்குள் கொணர்ந்து பாதுகாத்து வைத்திருத்தலைப் பாடுபொருளாக உடையது வெட்சித் திணையாகும்.

61. படைஇயங்கு அரவம் பாக்கத்து விரிச்சி
புடைகெடப் போகிய செலவே புடைகெட
ஒற்றின் ஆகிய வேயே வேய்ப்புறம்
முற்றின் ஆகிய புறத்து இறை முற்றிய
ஊர்கொலை ஆகோள் பூசல் மாற்றே
நோயின்று உய்த்தல் நுவல்வழித் தோற்றம்
தந்துநிறை பாதீடு உண்டாட்டுக் கொடையென
வந்த ஈரேழ் வகையிற்று ஆகும்.

1. பகைவர் நாட்டுப் பசுக்கூட்டங்களைக் கவர்ந்து வரச்செல்லும் படைவீரரின் இயக்கத்தினால் எழும் ஆரவார ஒலி;
2. வெட்சிமறவர் தம் ஊர்க்கண் நொதுமலர் கூறும் சொற்களைத் தமக்கேற்ற நல் நிமித்தமாகக் (விரிச்சி) கொள்ளுதல்.
3. தம்மொடு கலந்து நிற்கும் மாற்றரசரின் ஒற்றர்கள் அறியாதவாறு வெட்சி மறவர் செல்லுதல்;
4. மாற்றரசரின் ஒற்றர் அறியாதவாறு அவர்தம் ஆநிரை உள்ள நிலையைத் தம் ஒற்றரால் அறிந்த உளவு;
5. உளவால் அறிந்த இடத்தினைச் சூழ்ந்து தக்க தருணம் பார்த்துக் காத்திருத்தல்;
6. அவ்வாறு சூழப்பட்ட ஆநிரைக்கு உரிய பகைவீரரை அவர்கள் எதிர்த்த வழி அழித்தல்;
7. பகைவரின் பசுக்கூட்டங்களைக் கவர்ந்து கொள்ளுதல்;
8. கவர்ந்த ஆநிரையை மீட்கவரும் பகைவீரருடன் ஏற்படும் பூசலைத் தவிர்த்து மீளுதல்;
9. கவர்ந்த பசுக்கூட்டங்களுக்கு வருத்தம் நேராதவாறு கொண்டு வருதல்;
10. தம்மவர் புகழ்ந்தரைக்குமாறு நிரை கவர்ந்தார் திரும்பி வருதல்;
11. கவர்ந்த நிரையைத் தம் ஊரகத்துக் கொண்டு வந்து நிறுத்துதல்;
12. கொண்டுவந்த பசுக் கூட்டத்தைப் பங்கிடுதல்;
13. நிரைகவர்ந்து பாதீடு பெற்றோர் வெற்றி மகிழ்ச்சியால் உண்டு களித்தல்;
14. தாம் பெற்ற ஆநிரையைப் பிறர்க்கும் மகிழ்ந்து கொடுத்தல்

ஆகிய பதினான்கு துறைகளை உடையது வெட்சித்திணை.

60. Vēntuviṭu muṉaiñar Vēṟṟuppulak kaḷaviṉ
ātantu ōmpal mēvaṟṟu ākum.

The theme of veṭcit tiṇai is as follows:

The army of the king stationed at the border camps would, on orders from their king, cross the border, enter into the enemy's land, stealthily capture their cows, bring them to their own land and protect them well.

61. Paṭaiiyaṅku aravam pākkattu viricci
puṭaikeṭap pōkiya celavē puṭaikeṭa
oṟṟin ākiya vēyē vēyppuṟam
muṟṟiṉ ākiya puṟattuiṟai muṟṟiya
ūrkolai ākōḷ pūcal māṟṟē
nōyiṉṟu uyttal nuvalvaḻit tōṟṟam
tantuniṟai pāfiṭu uṇṭāṭṭuk koṭaiyeṉa
vanta īrēḻ vakaiyiṟṟu ākum.

The theme of veṭcit tiṇai being lifting the cattle of one's enemy, it has the following fourteen aspects or sub themes:

1. the noise created by the movement of the territorial army;
2. Considering as a good omen the casual remarks of the neutral people in the hamlet;
3. marching of the army without the knowledge of the spies of the enemy infiltrated into their midst;
4. report of their spies regarding the positions of the cattle to be lifted, without being spied by the enemy.
5. to besieze the reported positions of the cattle and to lie in wait for an opportune moment to lift them;
6. destroying those who oppose lifting the cattle
7. lifting the cattle;
8. avoiding a formal battle with enemies who try to recover their cattle,by cleverly defusing the tension;
9. to bring the stolen cattle to their land without causing them any hardship;
10. returning home with enemy's cattle amidst the cheering crowds of their native land;
11. delivering the herds of cows to the authorities concerned;
12. sharing the cattle among all those concerned;
13. indulging in a feast of victory, and
14. distributing some cows freely to others not connected with the exploit.

**62. மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே.**

மறத்தொழிலில் மீதூர்ந்து நிற்கும் மறக்குடியின் சிறப்பைக் கூறுதலும், வெற்றிக்குச் சிறப்பாகிய கொற்றவையின் நிலையைக் கூறுதலும் குறிஞ்சித் திணைக்குப் புறனாகிய வெட்சியின்பாற்படும்.

**63. வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட்டு அயர்ந்த காந்தளும்; உறுபகை
வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்ப்
போந்தை வேம்பே ஆர் என வரூஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவும்;
வாடா வள்ளி; வயவர் ஏத்திய
ஓடாக் கழல்நிலை உளப்பட ஓடா
உடல்வேந்து அடுக்கிய உன்ன நிலையும்;
மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்
தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்;
ஆரமர் ஓட்டலும்; ஆபெயர்த்துத் தருதலும்;
சீர்சால் வேந்தன் சிறப்பெடுத்து உரைத்தலும்;
தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தலும்;
அனைக்குஉரி மரபினது கரந்தை; அன்றியும்
வருதார் தாங்கல்; வாள்வாய்த்துக் கவிழ்தல் என்று
இருவகைப் பட்ட பிள்ளை நிலையும்;
வாள்மலைந்து எழுந்தோனை மகிழ்ந்துபறை தூங்க
நாடு அவற்கு அருளிய பிள்ளை யாட்டும்;
காட்சி, க(ா)ல்கோள், நீர்ப்படை, நடுதல்
சீர்த்தமரபின் பெரும்படை, வாழ்த்தல் என்று
இருமூன்று மரபின் கல்லொடு புணரச்
சொல்லப் பட்டஎழு மூன்று துறைத்தே.**

1. வெறியாடுதலில் சிறந்தவனாக அறியப்பட்ட, கேட்போர் விரும்பத்தக்க சொற்களைக் கூறும் வாயினனாகிய வேலன் தெய்வமுற்று ஆடுதலாகிய காந்தள் என்னும் மறநிலைக் கூத்தும்;

2-4 போரிடும் மறவர் தம்மிடையே வேறுபாடு தெரிதல் வேண்டிச் சூடிய பெரும் புகழை உடைய தத்தம் வேந்தர்களுக்கு உரிய பனை, வேம்பு, ஆத்தி என்னும் பூக்களின் பெயர்களால் வழங்கும் துறைகளும்;

5. மகளிர் ஆடும் வள்ளியென்னும் கூத்தும்;

6. வீரரால் புகழப்பட்ட கழல்நிலையும்;

62. maṟaṅkaṭaik kūṭṭiya kuṭinilai ciṟanta
koṟṟavai nilaiyum attiṇaip puṟaṉē.

To depict the exploits of the warrior clan and to hail the blessings of koṟṟavai, the goddess of victory also belong to veṭcit tiṇai, the non-Akam parallel to kuṟiñci.

63. veṟiyaṟi ciṟappiṉ vevvāy vēlaṉ
veṟiyāṭṭu ayarnta kāntaḷum; uṟupakai
vēntiṭai terital vēṇṭi ēntupukaḻp
pōntai vēmpē ār eṉa varūum
māperun tāṉaiyar malainta pūvum;
vāṭā vaḷḷi; vayavar ēttiya
ōṭāk kaḻalnilai uḷappaṭa ōṭā
uṭalvēntu aṭukkiya uṉṉa nilaiyum;
māyōṉ mēya maṉperuñ ciṟappiṉ
tāvā viḻuppukaḻp pūvai nilaiyum;
āramar ōṭṭalum; āpeyarttut tarutalum;
cīrcāl vēntaṉ ciṟappeṭuttu uraittalum;
talaittāḷ neṭumoḻi taṉṉoṭu puṇarttalum;
aṉaikkuuri marapiṉatu karantai; aṉṟiyum
varutār tāṅkal; vāḷvāyttuk kaviḻtaleṉṟu
iruvakaip paṭṭa piḷḷai nilaiyum
vāḷmalaintu eḻuntōṉai makiḻntupaṟai tūṅka
nāṭuavaṟku aruḷiya piḷḷai yāṭṭum
kāṭci, kālkōl, nīrppaṭai, naṭutal
cīrtta marapiṉ perumpaṭai vāḻttal eṉṟu
irumūṉṟu marapiṉ kalloṭu puṇarac
collap paṭṭa eḻumūṉṟu tuṟaittē.

veṭcittiṇai has, in addition, the following twenty one turai or sub-themes as per the tradition:

1. The dance of kāntaḷ by vēlaṉ the possessed priest adorned with kāntaḷ flowers who is well known and therefore preferred for his foretellings;
2-4. Wearing of the flowers of palmyra, margosa and atti, the common mountain ebony by the respective huge armies of the three great kings for the purpose of identity and distinction;
5. the dance of *vaḷḷi* by women;
6. praising of the war anklets of the warrior

7. புறங்காட்டாது போரிடும் வேந்தனின் வெற்றி கருதி உன்ன மரத்தில் நிமித்தம் காணும் உன்னநிலையும்;

8. காத்தல் தொழிலால் மாயோனோடு பொருந்திய மன்னர்களின் பெருஞ்சிறப்பினையும் கெடாத சிறந்த புகழினையும் கூறும் பூவை நிலையும்; அன்றி மாயோனை ஒத்த பூவையின் மலர்ச்சியைப் புகழ்தலாகிய துறை எனினும் பொருந்தும்; இனி சிவன், திருமால், முருகன் என வேறு கடவுளரை நோக்கி உவமித்துப் புகழ்தலும் பூவைநிலையாகக் கொள்ளலாம்.

9. அரிய போரின்கண் வெட்சி மறவரைக் கரந்தை வீரர்கள் பொருது ஓடச் செய்தலும்;

10. வெட்சியார் கவர்ந்த நிரையை மீட்டலும்;

11. புகழ் மிக்க தம் வேந்தனுடைய வீரம், வென்றி ஆகியவற்றை எடுத்துக் கூறுதலும்;

12. தன்னுடைய வலிய போர் முயற்சியின் காரணமாக வஞ்சின மொழியைத் தன்மேலேற்றிக் கூறுதலும் ஆகிய அத்தனையும் கரந்தைக்குரிய மரபுகளாம். அன்றியும்;

13. எதிர்த்து வரும் கொடிப்படையினை முன்னின்று தடுத்தலும்;

14. பகைவர் வாளாற்பட்டு வீழ்தலும் ஆகிய இருவகைப்பட்ட பிள்ளைநிலையும்;

15. வாளாற்பட்டு வீழாமல் பொருது வெற்றி பெற்றோனுக்கு மகிழ்ச்சியால் பறைகள் ஒலிக்கத் தண்ணடை வழங்கிய பிள்ளையாட்டும்;[7]

16. வீரத்தொடு பொருது வீழ்ந்த வீரர்க்குக் கல்லெடுத்தற் பொருட்டு அதற்கேற்ற கல்லைத் தேர்ந்து காணுதலும்;

---

7 (அ) "அனைக்குரி மரபின் கரந்தை" என்னும் அடி இதனையடுத்து வருவதாகக் கொள்ளும் நச்சினார்க்கினியரின் பாடம் பொருத்தமாகக் தோன்றுகிறது.

(ஆ) பிள்ளையாட்டு என்னும் துறைக்கு வீரனுக்குத் துறக்கமாகிய நாட்டை அளிப்பது என்னும் இளம்பூரணரின் உரை பொருத்தமாகப்படவில்லை. வாட்போரில் வென்ற அரசிளங் குமரனை அந்நாட்டில் உள்ளார் கண்டு வந்து அவற்கு அரசுகொடுத்த பிள்ளைப் பருவத்தோனைக் கொண்டாடிய ஆட்டும் எனவரும் நச்சினார்க்கினியரின் உரையும் இவ்விடத்துப் பொருத்தமாகப்படவில்லை. ச.சோ.பாரதியார், பாலசுந்தரனார் ஆகியோரின் உரை இந்தச் சூத்திரச் சூழலுக்குப் பொருத்தமாகக் காணப்படலின், அதுவே மேலே தரப்பட்டுள்ளது.

7. invoking the unnam tree for omens regarding the outcome of the war in which the never fleeing king or his warriors are to take part;

8. praising the greatness and might of the kings who resemble Māyōn, the god of protection whose complexion is like that of pūvai, the bilberryflower; or prasing the kings as comparable to any god like civan, tirumāl, murukan, etc., or praising the puvai flowers as it resembles the god māyōn while in full bloom;

9. Karantai warriors driving the vetci enemies back after fierce battle;

10. getting the cattle released;

11. extolling the exploits of their great king;

12. warrior taking vows in virtue of his own endeavours in battle; all these belong to karantai; moreover.

13. the two kinds of pillai nilai: blocking and resisting the opposing army

14. and falling a prey to their sword;

15. granting lands with a beat of gleeful drums to a warrior who emerged successfully from a fierce battle[8];

16. to identify a proper stone to erect as a memorial for the bravely fallen hero;

---

8. (a) The line fourteen of this cutra is taken as line eighteen by Naccinārkkiniyar and his reading seems to be the correct one.

(b) both the commentaries by Iḷampūraṇar and Naccinārkkiniyar on this sub theme namely, piḷḷaiyāttu do not suit the context. Those of S.S.Bharathiyar and Balasundaram seem to be the probable interpretation and hence it is glossed above as such.

17. அவ்வாறு கண்ட கல்லைக் கைக்கொள்ளுதலும். (கல்கோள்) அல்லது அக்கல்லை அமைத்தற்குரிய மேடை அமைத்தலும் (கால்கோள்);
18. அக்கல்லை நீராட்டித் தூய்மைப்படுத்தலும்;
19. வீரனது பெயர் அல்லது உருவம் பொறித்த கல்லை நடுதலும்;
20. நட்ட கல்லுக்குப் பெருமை பொருந்திய மரபின்படி பூசனை செய்தலும் அல்லது கோட்டம் அமைத்தலும்;
21. அக்கல்லைத் தெய்வத்தோடு ஒப்பக் கருதி வாழ்த்தி வழிபடுதலும் ஆகிய நடுகல் பற்றிய ஆறு துறைகளும் சேரச் சொல்லப்பட்ட துறைகள் மொத்தம் இருபத்தொன்றாகும்.

கரந்தைக்கெனத் தனித் திணையைத் தொல்காப்பியர் வகுக்க வில்லை. எனவே நிரை கவர்தல் தொடர்பான பதினான்கு துறைகளை முன்னர்க்கூறி, நிரைமீட்டல் தொடர்பான கரந்தைப் பொருண்மைக்குரிய துறைகளையும், புறத்திணை ஏழிற்கும் பொதுவான துறைகளையும் இச் சூத்திரத்துள் கூறுகிறார்.

64. வஞ்சி தானே முல்லையது புறனே
எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்றே.

வஞ்சியென்னும் புறத்திணை முல்லை என்னும் அகத்திணைக்குப் புறனாகும். இது, மண்ணின் மீது நீங்காத வேட்கையினால் பிறர் மண்ணை அகப்படுத்தச்சென்ற வேந்தன்மீது அதற்குரிய வேந்தன் போர் தொடுத்து அவன் அஞ்சுமாறு அவன்மேற் சென்று வென்று அடக்கு தலைப் பொருளாக உடையது.

65. இயங்குபடை அரவம் எரிபரந்து எடுத்தல்
வயங்கல் எய்திய பெருமை யானும்
கொடுத்தல் எய்திய கொடைமை யானும்
அடுத்தூர்ந் அட்ட கொற்றத் தானும்
மாராயம் பெற்ற நெடுமொழி யானும்
பொருளின்று உய்த்த பேராண் பக்கமும்
வருவிசைப் புனலைக் கற்சிறை போல
ஒருவன் தாங்கிய பெருமை யானும்
பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலையும்
(10) வென்றோர் விளக்கமும் தோற்றோர் தேய்வும்
குன்றாச் சிறப்பின் கொற்ற வள்ளையும்
அழிபடைதட் டோர் தழிஞ்சியொடு தொகைஇக்
கழிபெருஞ் சிறப்பின் துறைபதின் மூன்றே.

17. to collect the stone or to prepare a pedestal for the stone;

18. to give a ceremonial bath to the stone;

19. to erect the stone with an engraving of the figure of the hero or the name and exploits of the hero;

20. to worship the herostone with appropriate offerings or to build a temple around it;

21. to pay homage to the memory of the hero.

Tolkāppiyar has not classified a separate tiṇai as Karantai. He subsumes therefore all the subthemes relating to Karantai under this cūtra.

64. vañci tāṉē mullaiyatu puṟaṉē
eñcā maṇṇacai vēntaṉai vēntaṉ
añcutakat talaiccenṟu aṭalkuṟit taṉṟē.

Vañcit tiṇai is the non-Akam parallel to mullait tiṇai. This theme (vañci) deals with the invasion of a neighbouring country whose greedy king had tried to annexe the land of the invader, and a terrible war resulting in a crushing defeat of the rival king.

65. iyaṅkupaṭai aravam eriparantu eṭuttal
vayaṅkal eytiya perumai yāṉum
koṭuttal eytiya koṭaimai yāṉum
aṭuttūrntu aṭṭa koṟṟat tāṉum
mārāyam peṟṟa neṭumoḻi yāṉum
poruḷiṉṟu uytta pērāṇ pakkamum
varuvicaip puṉalaik kaṟciṟai pōla
oruvan tāṅkiya perumai yāṉum
piṇṭam mēya peruñcōṟṟu nilaiyum
veṉṟōr viḷakkamum tōṟṟōṟ tēyvum
kuṉṟāc ciṟappiṉ koṟṟa vaḷḷaiyum
aḻipaṭai taṭṭōr taḻiñciyoṭu tokaiik
kaḻiperuñ ciṟappiṉ tuṟaipatiṉ mūṉṟē.

1. பல்வகைப் படைகளும் இயங்குவதால் எழும் ஒலியும்.
2. பகைவரது ஊர்களை எரியூட்டி அழித்தலும்,
3. தானை வீரரின் செயல்திறத்தால் வேந்தன் எய்தும் பெருமையும்,
4. வேந்தன் தன் தானை வீரர்க்கும் பிறர்க்கும் வழங்கும் கொடைப்பண்பும்,
5. பகைவீரர்களை நெருங்கிச் சென்று பொருது அழித்த வெற்றியும்.
6. வேந்தனால் பரிசும் விருதும் பெற்ற மிகுதியால் மறவர் கூறும் தற்புகழ்ச்சியும், பிறர்கூறும் மீப்புகழும்.
7. கொடிய பகைவராயினும் மதியாமற் சென்று போரிடும் பெருவீரமும்
8. விரைந்து பெருகிவரும் வெள்ளத்தை அசையாது தாங்கிநிற்கும் கல்லணை போலத் தன்னை எதிர்நோக்கி வரும் பெரும் படையினை அயராது தனியனாய்த் தடுத்து நின்று போரிடும் பெருமையும்,
9. மறவர்க்கு வேந்தன் உணவு உருண்டைகளை அளித்து மகிழ்விக்க விரும்புதலாகிய பெருஞ்சோற்று நிலையும்,
10. வெற்றி பெற்ற வேந்தன்மாட்டு உளதாய பெரும்புகழும்,
11. தோல்வியுற்றோர் மாட்டு உளதாய மெலிவும்,
12. தோற்ற கொற்றவன் அளிக்கும் திறைப்பொருள்களைப் பெறுதலாகிய குறைவற்ற வென்றிச் சிறப்பினையுடைய கொற்றவள்ளையும்,
13. பகைவர் எறிந்த கொடிய படைக்கருவிகளைத் துணிந்து தம்மேல் ஏற்று விழுப்புண்பட்டமறவர்களை வேந்தன் பெருமையோடு தழுவிப் பாராட்டுதலாகிய தழிஞ்சியும், என்று தொகுத்துக்கூறிய பதின்மூன்றும் வஞ்சித்திணையின் துறைகளாகும்.

Vañcit tiṇai has the following thirteen subthemes of great celebrity:

1. great noise caused by the movement of various segments (services) of the army;
2. destroying the hamlets and villages of the enemy by setting them on fire
3. the glory achieved by the king because of the heroic feats of his warriors;
4. munificence of the king in liberally rewarding his soldiers and others with gifts and prizes;
5. feats of valour shown by charging the soldiers of the enemy in close quarters and decimating them;
6. elated by the honour and rewards bestowed by the king, the soldiers praising themselves too much or being praised highly by others;
7. great heroism shown in fighting ferociously with the enemies, ignoring their strength and might as if of no consequence;
8. heroic valour shown by a warrior in resisting and containing a vast rushing army all by himself, like a rocky dam arresting the tumultuous rush of surging floods;
9. great martial feast hosted by the king to his warriors
10. rejoicing encomium paid to the victorious king;
11. graceful consolation and sympathy for a vanquished king;
12. the theme of koṟṟa vaḷḷai dealing with the acceptance of the tributes paid by the defeated king;
13. the theme of taḻiñci which deals with a king's care and concern for his soldiers maimed by the cruel weapons of the enemy, shown by his patronizing embrace and appreciation.

66 உழிஞை தானே மருதத்துப் புறனே
முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்
அனைநெறி மரபிற்று ஆகும் என்ப.

